# மண்ணிலே வெண்ணிலா

(பெண்களுக்கு நல்வாழ்வு ஆலோசனைகள்)

**Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி**, MBBS, DCH.
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர்:*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி : 00 91 94452 74310, 0416-2242943, 2248943
<hq@bymonline.org> www.bymonline.org

**MOON ON EARTH** (TAMIL)

Copyright 1979 Dr. Lilian Stanley
13 Church Colony
Vellore 632 006
Mobile: 00 91 98435 11943
<lilianstanley@gmail.com>
www.lilianstanley.com

First Edition : September 1979
Second Edition : December 2001
Third Edition : May 2005
Fourth Edition : October 2009
Fifth Edition : September 2013
This Edition : April 2024

Available in English, Hindi, Kannada and Punjabi also.

*Printed at*:
Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002

## நீதியின்
## சூரியனுக்கு
## அர்ப்பணிப்பு



# மதிப்புரை

மண்ணுலகில் பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரு வாழ்வு பற்பல பருவங்களையும் கட்டங்களையும் கடந்து செல்ல வேண்டியதிருக் கிறது.

"கண்மணி" எனப் பெற்றோரால் போற்றப்படும் *சிறுமி!*

ஆடவர் விரும்பி நோக்கும் பருவ *மங்கை!*

தொட்டுத் தாலி கட்டிய கணவனுக்கு இணையற்ற பொக்கிஷ மாம் அன்பு *மனைவி!*

எவ்விதச் சூழ்நிலையிலும் "இல்லை" எனாமல், முகங்கோணா மல், குடும்பத்தை அணைத்து நிற்கும் *இல்லக்கிழத்தி!*

தன் குழந்தைகளுக்கு அணைக்கும் கரங்கொண்ட அன்பின் *தாய்!* ஆலயத்தில் அமைதியான, ஆனால் யாவற்றையும் ஆழ்ந்து கவனிக்கும், ஓர் *அங்கம்!*

சமுதாயத்தில் துயரில் வாழும் ஏனைய பெண்களுக்குப் பணி புரியும் ஒரு *சேவகி!*

இவ்விதம் பலவித பருவங்களையும் கடந்து செல்லும்பொழுது பற்பல சோதனைகள், சோர்புகள், வேதனைகள், பலவீனங்கள் அவளைச் சூழ்கின்றன. எனவே, அவள் உள்ளம் தன்னைப் பரிசுத்த மாகக் காத்துக்கொள்ள ஒரு பாதுகாவலையும், தன் சஞ்சலத்தை ஊற்றி ஆறுதல் பெறும் ஓர் இடத்தையும், நெருங்கி நிற்கும் சோதனையை விட்டு வெளிவரும் மார்க்கத்தையும் ஆவலுடன் தேடி நிற்கிறது. எவ்விதச் சூழ்நிலையிலும், இடர் நீக்கி, இன்பம் அளிக்க வல்ல இறைவனை அண்டி, ஆறுதலையும், விடுதலையை

யும், பரிசுத்தத்தையும் பெறும் வழியை அறியாததினாலேயே அநேகப் பெண்மணிகள் தம் வாழ்வின் துயரில், போராட்டத்தில் நலிந்து விடுகின்றனர்.

*“மண்ணிலே வெண்ணிலா”* என்ற இப்புத்தகம் இக்குறையைத் தீர்த்துவைக்கவே எழுதப்பட்டதுபோல் தோன்றுகிறது. இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள காரியங்கள், வாழ்க்கைக்கு உதவாத “ஏட்டுச் சுரைக்காய்” போன்ற வீண் தத்துவங்கள் அல்ல! அனுதின வாழ்க்கையின் ஆசீர்வாதங்களுக்கு வழிகாட்டும் ஒரு நடைமுறை வழிகாட்டி! எத்தகைய சூழ்நிலையிலும் பருவத்திலுமுள்ள மங்கையருக்கு, அவர்தம் பிரச்னைகளுக்கு ஓர் இணையில்லா மருந்து! சாதி, இன, மத பேதமின்றி ஒவ்வொரு பெண்ணும் இப்புத்தகத்தை ஒரு முறையேனும் படிப்பது அநேக சோதனைகளுக்கு அவர்களை விலக்கிக் காக்கும்; ஒரு வெற்றி வாழ்வைச் சுட்டிக்காட்டும் என உறுதியாக நம்புகிறேன்.

திருமதி லில்லியன் ஸ்டான்லி அவர்களுடன் சேர்ந்து இந்தப் புத்தகத்தைத் தேவ குமாரனாம் இயேசுவின் பாதத்தில் அவர் ஆசியை நாடிச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்!

சென்னை
21 செப்டம்பர் 1979





# உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| 1. | மண்ணிலே வெண்ணிலா | ... | 7 |
| 2. | மகிழ்ச்சியாயிருப்பது எப்படி? | ... | 14 |
| 3. | புரட்சிப் பெண் | ... | 18 |
| 4. | “மிஸ் பைபிள்” | ... | 22 |
| 5. | பெண்களின் பேச்சுத் திறன் | ... | 25 |
| 6. | அடுப்படியில் புறாக்கள் | ... | 30 |
| 7. | உன்னதத்திலிருந்து உதவி | ... | 35 |
| 8. | “டாக்டர் ஜீசஸ்” | ... | 38 |
| 9. | நேசமா, மோகமா? | ... | 44 |
| 10. | திருமணமும் திருமனமும் | ... | 52 |
| 11. | ஆண்டவரே, ஜெபிக்கக் கற்றுத்தாரும்! | ... | 55 |
| 12. | வீட்டு ஜெபக்குழுக்கள் | ... | 59 |
| 13. | மருத்துவமனை ஊழியம் | ... | 63 |
| 14. | நாதனுக்காய் நாடோடிகள்! | ... | 68 |
| 15. | பெண்களுக்குக் கேள்விகள் | ... | 73 |

# 1

# மண்ணிலே வெண்ணிலா

நிலவின் சிறப்புத் தன்மையால் நாம் அதைப் பெண்ணுக்கு ஒப்பிடுகிறோம். வேதமும் இதற்குப் பல குறிப்புகளைத் தருகிறது.

இரவை ஆளவே இறைவன் நிலவைப் படைத்தார் (ஆதி 1:16). இருள் சூழ்ந்த இவ்வுலகில், குறிப்பாக இல்லத்தில், பெண்களின் பொறுப்பு அதுவே. ஈசாக்கின் வாழ்விலுள்ள இருள் ரெபெக்காளின் வருகையினால் அகன்றது. ‘‘ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்’’ (ஆதி 24:67). இரவை ஆளவே உண்டாக்கப்பட்ட நாம், அதை மறந்து, இரவைக் குறித்துக் குறைகூறித் திரியலாமா? இல்லமென்றால் இருள் இருக்கத்தான் செய்யும். அதை ஒளிமயமாக்கும் கிருபையும் பொறுப்பும் நமக்கே உண்டு என்பதை மட்டும் நாம் புரிந்துகொண்டால் நிலவொளியின் நடு இரவும் எத்துணை இன்பமும் பிரியமுமாயிருக்கும் தெரியுமா? ஆனால் நாமோ இரவைக் குறை கூறுகிறோம். நம்மை நாமே மேகத்தால் மூடிக்கொண்டு, சுற்றியுள்ள உலகை இருளில் விட்டுவிடுகிறோம்.



பகலின் பகட்டு வாழ்வில் தங்கியிருப்பதையே நாம் கனவு காண்கிறோம். பகலில் நிலவினால் பயன் என்ன? ஒளியும் தெரியாது, அழகும் இருக்காதே. இருளை ஒளியாக்கும் நமது மாபெரும் கடமையை விட்டு ஆண்களின் பகலொளிக்குப் போட்டியிடுவது பொருந்துமா? இன்றையச் சோக நிலை இதுவே. நவீன உடைகளும், சமூக நாட்டமும் எத்தனை குடும்பங்களை நாசமாக்கிவிட்டது தெரியுமா? கணவர் கவனிக்கப்படுவதில்லை; குழந்தைகள்மேல் கரிசனை காட்டப்படுவதில்லை; விவாகரத்தும், கேவல நடத்தையும், உடல்நலக்கேடும், மனநோயும் மலிந்துவிட்டன. உலகை அழிவுக்குத் தப்புவிக்கும் தன்மை பெண்ணுக்கே உண்டு. பெண்ணானவள் ஒளிவீசி வாழ வேண்டுமானால், தேவன் குறித்துள்ள இடத்திற்கு வர அவள் பக்குவப்பட்டே ஆகவேண்டும். தேவன் நமக்களித்த இடத்திலும் மேலான நிலைமையை நாடித் தேடி தேவ கட்டளையை மீறுவதால்தான் தேவ மக்களுக்குத் தோல்வி ஏற்படுகிறது. எதிரி வீழ்ச்சியடையும்வரை, தேவனின் சொல் கேட்டு, ஆயலோன் பள்ளத்தாக்கில் நின்றதே அந்நிலவு! (யோசு 10:12,13). தேவன் உனக்குப் பள்ளத்தாக்கைத்தான் குறித்திருந்தால் எதிரியை வீழ்த்திட நீ அங்கேயே இரு. பள்ளத்தாக்கில் உனது சேவை ஒரு வேளை பாராட்டில்லாமல் போகலாம். ஆனால் பரிசோடு தேவன் வருவாரே! போதாதா அது உனக்கு? சகோதரியே, எழும்பு! உன்னை மறைக்கும் மேகத்தை விட்டு வேகமாய் வெளிக்கிளம்பி வா! ‘‘இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்’’ என்று திருப்பாடகனோடு சேர்ந்து பாடு (சங் 139:11).

ஒளி வீச வேண்டுமானால் முதலாவது உன்னில் ஒளியில்லை என்பதை நீ உணரவேண்டும் (யோபு 25:5). சந்திரன் தன் ஒளியைச் சூரியனிடமிருந்தே பெற்றுக்கொள்வது போல நீயும் நீதியின் சூரியனாம் கிறிஸ்துவுக்கு முன் காத்திருந்து அவர் தரும் இலவச ஒளியைப் பெற்றுக்கொள்ளப் பழகிக்கொள். உன்னைச் சுற்றியும் இருளில் வாழும் எண்ணிலா மக்களுக்கு அவர் ஒளியைப் பிரதிபலிக்கும் வெண்ணிலவாய் இரு. ‘‘அவர்கள் கடவுளை நோக்கிப் பார்த்துப்

பிரகாசமடைந்தார்கள்'' (சங் 34:5). ''கர்த்தர் தமது முகத்தை உன்மேல் பிரகாசிக்கச் செய்வார்'' (எண் 6:25). உன்னைப் பிரகாசிப்பிக்கும் ''மெய்யான ஒளி'' இயேசுவே (யோ 1:9).

துன்ப நேரத்தில் துவண்டுவிடுவதும், கண்ணீர் சிந்துவதும் பெண்ணின் பிறவிக் குணம். எனவே அவள் தேற்றப்படவும், ஆற்றப் படவும் விரும்புவது இயல்பே. ஆனால் துன்ப வேளையில் பிறர் அன்பை, ஆறுதலை மட்டுமே உன் இதயம் தேடுகிறதோ? வேண்டாம். அவ்வெண்ணத்திலிருந்து இன்றே விடுபடு. அதிகாலை தோறும் திருமுகவொளியில் ஆனந்தமாய்க் களித்திடு (சங் 89:15). ''தேவனே, நான் புரிந்துகொள்ளப்படுவதைவிட புரிந்துகொள்ளவே விரும்புகிறேன்'' என்று புனித பிரான்சிஸ் வேண்டினார். அதுவே நமது ஜெபமாயிருக்கட்டும். குழந்தையில்லாதிருந்த ராகேல் தன் இதய வேதனையைக் கணவனிடம் கொட்டி, ''எனக்குப் பிள்ளை கொடும், இல்லையேல் நான் சாகிறேன்'' என்றாள். அவள் வேதத் தின் அப்பக்கங்களையே இருட்டாக்கிவிட்டாள். ஜோதிகளின் பிதாவை அவள் உள்ளம் நாடியிருக்குமேயானால் அவளது சாட்சி எவ்வளவாய்ப் பளிச்சிட்டிருக்கும், எண்ணிப் பாருங்கள்! அதே பிரச்னையுடைய அன்னாளின் நடத்தையைப் பாருங்கள். அவள் கடவுளின் முன்னிலையில் தன் கண்ணீரைக் கொட்டினாள். ''பின்பு அந்தப் பெண் புறப்பட்டுப்போய் சாப்பிட்டாள்; அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை'' என்று வேதம் கூறுகிறது (1 சாமு 1:18). சிறு மனத்தாங்கலுக்கும் சாப்பிடமாட்டேனென்று கண்ணீர் சிந்தி நீண்ட முகத்துடன் திரியும் பெண்களுக்கு என்னே முன்மாதிரி!

சந்திரனுள்ளவரை மிகுந்த சமாதானம் இருக்குமென்று விவிலி யம் பகருவது வியப்பில்லையா? (சங் 72:7). ஆனால் நமது நிலை அதற்கு நேர்மாறாயிருக்கிறதே! ''நூறு ஆண்கள் கூடி வாழ்ந்து விடலாம்; ஆனால் இரண்டே பெண்கள் சேர்ந்து இருக்க முடியாது'' என்ற முதுமொழி எத்தனை வேதனைக்குரியது. நீ இருக்கிற இடத்தில் மிகுந்த சமாதானம் உண்டு என்று உன்னைக் குறித்துச் சொல்ல முடியுமா? அல்லது நீ தொலைந்தால்தான் அமைதியென்று உன் குடும்பம் சொல்லுகிறதா? அந்தோ! அநேக பெண்கள் இங்கு



தவறுவதால்தான் ஆண்களுக்கு வீட்டு எண்ணமே வெறுப்பை யளித்து, எங்காவது சென்று நேரத்தைக் கழிக்கும் நினைப்பு வருகிறது. உன் கணவருக்கு வீடு கசப்பாகுமானால் உன்னைத் தான் நீ சோதித்துப் பார்க்கவேண்டும்.

என்றோ படைத்த அந்நிலா எத்தனைக் காரிருளிலும் தன் அமைதியை அத்தனையாய்க் காத்திடுதே! மரண இருளின் பள்ளத் தாக்கில் உருவ நடந்தாலும், மனம் குன்றாது வாழ்வது எப்படி என்பதை அறிய வேண்டுமா? நள்ளிரவில் எழுந்து முழு நிலவைக் கவனித்துப் பார்! கலக்கம் என்பது கடுகளவும் அதற்கில்லை; எரிக்கும் குணம் எள்ளளவும் இல்லை. பதறாத அதன் பயணத்தைத் தான் என்னென்று சொல்வது! துவண்ட உள்ளத்தைத் தேற்றும் குளுமை! என்னே இனிமை! நாமோ கணப்பொழுதின் வேதனை யில் நமது நிலைமையை மறந்து கடுஞ்சொல்லை விசி எறிகிறோம். இதனால் வீட்டின் அமைதியே பறிபோய்விடுகிறது. சற்று அந் நிலவைப் பார்! மின்னலின் கேலி, இடி முழக்கப் பெருந்தொனி, புயலின் சீற்றம் மற்றும் எதற்கும் கலங்காத அமைதி, அழகு! கணவன், குழந்தைகள், வேலைக்காரர், சுற்றத்தார் எவரும் உனக்கேயுரிய அமைதியை அபகரிக்க இடங்கொடாதே! வாழ்வின் எந்நிலையிலும் சமாதானம் பண்ணவேண்டிய உன் கடமையைக் கருத்தில் கொள்வாயா? அன்று அபிகாயில் தனது சோகமய வீட்டையே ஒளிமய மாக்கிக் கடவுளால் ஆசீர்வாதம் பெற்றாள். ''நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக; நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழி வாங்காதபடிக்கும், நீ இன்று எனக்குத் தடை பண்ணினபடியினால் நீயும் ஆசீர்வதிக்கப்படு வாயாக!'' என்று அரசன் தாவீது அவளை வாழ்த்தினான் (1 சாமு 25:33). ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது'' என்றார் இயேசு (மத் 5:9).

வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் ஆசீர்வாதமாயிருக்கவே தேவன் நம்மை உண்டாக்கினார். ''தேசம் ... சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினால் ... ஆசீர்வதிக்கப்படுவதாக'' (உபா 33:13,14). ஆம், சந்திரனின் அருமையான பலன்களினால் நாடு

ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இந்நாடு நம்மால் சற்றாகிலும் நலம் பெற்றுள்ளதா ? இந்தியா வாய்ப்பு மிக்க நாடாயிற்றே. 360 டிகிரி சுற்றுமுன் 360 மக்களைச் சந்திக்கலாமே. நமது நற்பலன்களை அள்ளி வழங்க என்னவோர் வாய்ப்பு! "உன் சந்திரன் மறைவ தில்லை" என்பது நாட்டின் ஆசீர்வாதங்களில் ஒன்றல்லவா ? (ஏசா 60:20). "நற்செயல்கள்" மிகுதியாய்ச் செய்து தொற்காள் தன்னைச் சூழ இருந்தோருக்கு பேராசீர்வாதமாயிருந்தாள் (அப் 9:36). "மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு, பரலோகத்திலி ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கட்டும்" என்ற நமது கர்த்தரின் கட்டளையைக் கவனித்து நடப்போமா ? (மத் 5:16).

இரவை ஆளச் சந்திரனைப் படைத்தார் எனப் பகரும் வேதம் அந்தகாரலோகாதிபதிகளையும் குறிப்பிடத் தவறவில்லை. நமது அரசு வென்றிட அவைகளோடும் நாம் போராடியே தீரவேண்டும். இந்த அதிபதிகள் நமது இந்தியப் பெருங்குடி மக்களை இருளில் அடிமைப்படுத்தி, கோடிக் கோடி சகோதரிகளை ஆட்டிப்படைக்கும் அவல நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமோ ? இருளில் ஒளிவீசும் முழு நிலவாய், வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பி லும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரிகளாய்த் திகழ்ந் திடுவோம். நாம் இருப்பதே மக்களுக்கு தேவ நினைவை உண்டு பண்ணத்தான். அவரை அவர்கள் தேடுமளவிற்கு நமது ஒளி அவர்கள் முன் பிரகாசிக்க வேண்டும். நிலவுத் தோற்றத்தில் தாவீது தேவ மகிமையைக் கண்டார் (சங் 8:3). நம்மைச் சூழவுள்ள தேவனற்ற சந்ததி நம்மைக் கவனித்துக்கொண்டிருக்கிறதென்பதை மறவாதே ! வேதம் வாக்களிக்கும் ஆத்தும இரட்சிப்பு, உடல் சுகம், வாழ வல்லமை, பிரச்னைகளுக்குத் தீர்வு, கேள்விகளுக்கு விடை போன்ற அனைத்திற்கும் மக்கள் நமது வாழ்க்கையினையே புரட்டிப் பார்க்கிறார்கள். நாம்தானே நடமாடும் நிருபங்கள் ? வேதம் நம்மில் உயிருள்ளதாயிருக்கட்டும். நம்மைப் கவனிப்போருக்கு வேதத்தின் அருமையான பலன்களை அள்ளித் தருவோம் (உபா 33:14). நம் மைக் காணுவோர் கிறிஸ்துவையே காணும்படி, கிறிஸ்துவின்



வாழ்வைத் தீர வாசித்து, அறிந்து, தெளிந்துணர்ந்து அப்படியே பிரதிபலிப்போம். இஸ்ரவேலர் இருண்ட காலத்தைக் கடக்கையில் ஒரு முழு நிலவாய் எழும்பினாள் தெபொராள்! தன் ஒளிக் கதிரால் அவர்களைக் கவர்ந்தாள், தேவைகளைச் சந்தித்தாள். வந்தோர் அனைவரும் தேவ ஞானம் அவளிலிருக்கக் கண்டனர் (நியா 4:1-4). "சந்திரன் ஆகாய மண்டலத்தின் உண்மையான சாட்சியாய் என்றென்றைக்கும் இருக்கும்" (சங் 89:37). இம்மண்ணிலே நமது கடமையும் அதுவே!

"சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார்" (சங் 104:19). மாபெரும் அழிவினின்று தம் மக்களைக் காக்க எஸ்தரை அரியணையில் அமர்த்திய தேவன், ஆபத்து வேளைக்கென்றே பெண்டிரையும் படைத்துள்ளார். "நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் ?" (எஸ்தர் 4:14). இக்காலத்தில் மவுனமா யிருந்தால் தேவன் நம்மைக் கட்டாயம் நியாயந்தீர்ப்பார். "நான் செத்தாலும் சாகிறேன்" எனப் பலிப்பீடத்தில் நம்மையே படைத்து கதறுவதேயன்றி வேறொன்றுமே நமது நாட்டை இன்று தப்புவிக் காது (4:16). எனவே இன்றே உபவாசத்தோடும் கண்ணீரோடும் கர்த்தர் பாதம் விழு (4:8,16). உன் மக்களுக்காய் அவரிடம் கதறி அழு (7:3). அவர் சமுகத்தில் மீண்டும் மீண்டும் பேசி, அவர் தாளடியைப் பற்றிப் பிடித்துக் குலுங்கி குலுங்கி அழு (8:3). நமது மக்கள்மேல் வரும் பொல்லாப்பை எப்படிப் பார்ப்பது ? நமது இந்திய சகோதரிகளுக்கு வரும் அழிவை நாம் எப்படிச் சகிப்பது ? (8:6).

சந்திரன் இருண்டுவிடுமுன் உன் சிருஷ்டிகரை நினை என்று வேதம் அறிவுரை பகர்கிறது. நீயே இருண்டுவிட்டால் உன் சிருஷ்டிகரைப் பிறர் நினைப்பது எப்படி ? (பிர 12:1,2). கொடிய காலங்கள் வரும். அந்நாட்களில் நாம் மவுனமாயிருக்க நேரிடும். நமது சுயேட்சையை இழந்து நமது ஒளியைக் கொடாமலிருக்க வேண்டிய நிலை நேரிடும். இயேசு கிறிஸ்து முன்னறிவித்த நாள் இதுவே. "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே ... சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் ... வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்

படும்'' (மத் 24:29). எனவே உயிருள்ளபோதே, ஒளியுள்ளபோதே, சுகமுள்ளபோதே, சுயேட்சையுள்ளபோதே போ... செயல்படு... ஒளிகொடு. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்'' (மத் 5:14). மெய் ஒளியான இயேசு இந்த நம்பிக்கையிலேயே உன்னை விட்டுப் பரமெழுந்தார். உன் விளக்கை மேகத்தால் மூடிப் போடாதே (மத் 5:15). கிறிஸ்துவோடு எழுந்து நீ நிலவைப் போன்று உன்னதங்களில் அவரோடு வீற்றிருக்கிறாய்! உலகம் உன் ஒளியைக் காணட்டும். "எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது; கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது'' (ஏசா 60:1). "பூமியின் கடையெல்லை வரை அவருடைய இரட்சிப்பாயிருக்கும்படி, புறவினத்தாருக்கு அவர் உன்னை ஒளியாக வைப்பார்'' (தானி 12:3).

"சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல் உதிக்கிற இவள்'' என்று தேவன் உன்னைச் சித்தரிக்கிறார் (உன் 6:10). உன் காதலன் உன்னை நேரில் காணுமுன் இப்படி நினைக்கிறான் என வைத்துக்கொள்ளுவோம். அவன் வரும்போது ஏனோதானோவென்றிருப்பாயா? உன்னாலான மட்டும் அலங்கரித்து, அவன் விரும்பும் வகையில் அவனுக்கு எதிர்ப்பட விழைவாயல்லவா? ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில், அவர் ஏமாற்றமடையாதபடி, நம்மை அவர் தரத்திற்கு உயர்த்திக் கொள்ள, ஆத்தும நேசர் தீட்டிய நமது சித்திரத்தை நம்முன் வைத்து அனுதினமும் ஏங்கி வாழ்வோமா? அருங்குணத்தில் அருணோதமாய், பரிசுத்த அழகில் சந்திரனாய், நமது வீட்டை, வேலையை, சுற்றத்தைச் சிதறடிக்க சத்துரு வெள்ளம்போல் வரும்போது கர்த்தருடைய ஆவியானவரின் கொடிகளைப் பிடித்து படையைப் போல் கெடியுமுள்ளவர்களாய் அணிவகுத்து நிற்போமா?



# 2

# மகிழ்ச்சியாயிருப்பது எப்படி?

பெண்களைத் திருப்தியாக்கி மகிழ்விப்பது மிகவும் கடினம் என்று பொதுவாகச் சொல்லுவார்கள். பெண்களாகிய நாம் தலை குனிந்து அதை ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். ஆனால் கிறிஸ்துவுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது. மகிழ்ச்சியாயிருக்க இதோ சில வழிகள் —

**வாழ்க்கையில் தேவன் நியமித்த நிலையை ஏற்றுக்கொள்!**

அநேக பெண்களை ஆசை என்னும் பூச்சி அரித்து நாசமாக்குகிறது. நான் அவளைப்போல் இல்லையே என்று நீ ஒருபோதும் நினைக்கக்கூடாது. தேவன் உன் வாழ்க்கையை நேர்த்தியாகத் திட்டமிட்டுள்ளார் என்பதை நினைவிற்கொள். ஒருவேளை நீ படிப்பை முடித்துவிட்டு வீட்டில் சும்மா இருக்கலாம், அல்லது நீ விரும்பிய மேற்படிப்புக்கு உன் பெற்றோர் உன்னை அனுப்ப இயலாதிருக்கலாம். உனது உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன என்று ஒருவேளை நீ எண்ணக்கூடும். உனது கணவர் இன்னும் இரட்சிக்கப்படாமலிருக்கலாம். குழந்தையில்லையென்றோ, அதிகக் குழந்

தைகளென்றோ நீ சோர்ந்துபோயிருக்கக்கூடும். கூடுதல் வசதி களைத் தேடுவதில் உனக்கிருக்கும் சந்தோஷத்தை இழப்பதைவிட, கர்த்தர் உனக்காக அன்புடன் வரையும் திட்டத்தைக் காண உன் கண்களை ஏறெடு.

**மனநிறைவோடிருக்கக் கற்றுக்கொள்!**

''போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்'' என்று திருவசனம் கூறுகிறது (1 தீமோ 6:6). தேவ பக்தி ஆதாயம்; ஆனால் அத்துடன் 'போதுமென்ற' மனதைக் கூட்டினால் அது மிகுந்த ஆதாயம் ஆகிறது. அதிருப்தி குடும் பத்தைக் கெடுக்கிறது. பெண்ணின் இருதயத்திலுள்ள அதிருப்தி முழுக் குடும்பத்தையுமே பாதிக்கும். துணிமணிகள் மீது பெண்கள் கொண்டுள்ள பேராசை அநேகக் குடும்பங்களை தீராக்கடன் தொல்லைக்குள்ளாக்கியிருக்கிறது. விரும்புவதையெல்லாம் வாங்க முயற்சிக்காமல் தேவையானவைகளை மட்டுமே வாங்கு. தேவன் தமது செல்வத்தின்படியே உன் குறைவையெல்லாம் நிறைவாக்கு வார் (பிலி 4:19). இதனை சிலர் ''வாஞ்சைகளையெல்லாம் நிறைவேற்றுவார்'' என தவறாய் அர்த்தப்படுத்தியுள்ளனர். ஆனால் நமது ''குறைகளையே'' நிவர்த்தி செய்வதாக தேவன் வாக்குப் பண்ணியுள்ளார். நீ அவருடைய பிள்ளையாயிருக்கும்போது உன் தேவையை அவர் சந்திக்காமல் விடுவாரோ? பண ஆசையே சப்பீராளுக்குச் சாவுமணி அடித்தது. உன் பக்கத்து வீட்டார் வைத் திருக்கிற யாவும் உனக்கும் இருக்கவேண்டும் என்று விரும்பாதே. பொறாமையையும் களைந்துவிடு. அது உன் சந்தோஷத்தை யெல்லாம் அரித்துவிடும். முறையிடுவதை நிறுத்தி துதிக்கத் துவங்கு. அதிருப்தியும் முறுமுறுத்தலுமே இஸ்ரவேலரின் பெரிய பாவம்.

**எளிதில் புண்படும் மனநிலை வேண்டாம்!**

பெண்ணினத்துக்கு மென்மைத் தன்மை தேவன் தந்த அணி கலன். ஏனெனில், அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கனிவுடன் பேணி வளர்ப்பதோடு குடும்பத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரின்



உணர்ச்சிகளையும் நன்கறிந்து ஆவன செய்யவேண்டும். ஆத்து மாக்களுக்காய்க் கண்ணீர் சிந்தி ஜெபிக்க இத்தன்மை சாதக மானது. ஆனால் நாமோ நமது பெற்றோர், நண்பர் அல்லது கணவர் சிறிதும் கடிந்துரைத்தாலும் உடனே கண்ணீர் சிந்திவிடுகிறோம். சந்தோஷமான மனநிலையை எப்பொழுதும் காத்துக்கொள்ள விரும்பினால் எந்தக் குறைகூறலும், கடிந்துரைத்தலும் உன்னுடைய தோல் ஆழத்துக்கு கீழே போகக்கூடாது. அமைதியாய் இருந்துவிடு வது பிரச்னைக்குப் பதில் அல்ல. ஆனால் மலர்ந்த முகத்துடன் கூடிய ஓர் உரையாடலோ, பேச்சுப் பொருள் மாற்றமோ சூழ்நிலையை இனிதாக்கும். உன் சமையலைப் பற்றி உன் கணவர் ஏதாவது குறைகூறினால் அமைதியாக ஒத்துக்கொள். நீ அவருடைய விலா எலும்பு; அவர் அதற்குக் கேடு விளைவிப்பாரோ?

**மறக்கக் கற்றுக்கொள்!**

சிறிய காரியத்தையும் இருதயத்தில் பேணி பொருமிக்கொண்டே யிருப்பது பெண்களுக்குப் பழக்கம். இது மகிழ்ச்சிக் கொல்லியாகிய பகையுணர்வில் கொண்டுபோய்விடும். புண்படுத்தியவைகள் யாவை யும் மறந்துவிடு. இது கூடாததல்ல. பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறதே. கடந்த கால கெட்ட சிந்தனை ஒன்றைச் சாத்தான் நினைவுபடுத்தினால் அதில் நிலைத்திருக்காதே. 'கிறிஸ்துவின் சிந்தை எனக்கு உண்டு' என்று அறிக்கை செய். கிறிஸ்து நமது எல்லாப் பழைய பாவங் களையும் மன்னித்து மறந்துவிடுகிறார். நாமும் அதையே பிறருக்குச் செய்திடுவோம்.

**கொடு; திருப்பிப் பெற அல்ல!**

நேசித்துப் பாதுகாக்கப்படவேண்டுமென்பது பெண்பாலரின் சிறப்புக் குணம். பிசாசு அடிக்கடி இந்த முடிச்சில் நம்மைக் கட்டி, சுய பரிதாபம் என்னும் குப்பைத்தொட்டியில் போட்டுவிடு கிறான். சுய பரிதாபம் ஒரு மகிழ்ச்சிக் கொல்லி. சுயத்தை மறந்து விடு. அதுவே மகிழ்ச்சிக்கு வழி. இரத்தச் சாட்சிகள் எவ்விதம்

மலர்ந்த முகத்துடன் மடிந்தனர்? அவர்கள் பெறுவதற்குமுன் கொடுத்தனர். அன்பைப் பெறமுடியாத இடத்தில் அன்பைக் கொடு. உன் தோழி உனக்கு உதவவில்லையானால், நீ அவளுக்கு உதவு. உன் கணவர் உன்னைப் புரிந்துகொள்ளவில்லையானால், நீ அவருடைய தேவைகளையும், ஏக்கங்களையும் புரிந்து உதவு. நீ தேற்றப்படவில்லையானால், நீ தேற்று. “அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கான வைகளையும் கவனிக்கட்டும்” (பிலி 2:4). நேசிப்பதல்ல, நேசிக்கக்கூடாதவர்களை நேசிப்பதே அன்பு. மன்னிப்பதல்ல, மன்னிக்க முடியாதவர்களை மன்னிப்பதே அன்பு.

கடைசியாக சகோதரிகளே, “கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.”



# 3

# புரட்சிப் பெண்

புதிய ஏற்பாட்டிலேயே குறிப்பிடத்தகும் பெண்மணி மகதலேனா மரியாள். பெண் குலத்தின் பிற்போக்கு முத்திரைகளைத் தகர்த்தெறிந்தவள் அவள். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒன்றுபட்டு, கல்வாரியின் கொடூர மரணத்தைக் காண கொல்கொதாவரை சென்று, நகரத்திற்குப் புறம்பே நிசப்தமான கல்லறைத் தோட்டத்திற்கும் தளராமல் சென்று, காலைக் காரிருளில் நித்திரையற்றவளாய் உயிர்த்தெழுந்த தன் நேசரைத் தேடி அலைந்து இப்படியாக இயேசுவின் வாழ்க்கையின் நான்கு சகாப்தங்களிலும் பங்கெடுத்தாள்.

வேதம் அனுமதி தரும் சில காரியங்களில்கூட ஈடுபடமுடியாதபடி பெண்களைச் சமூகக் கட்டுப்பாடுகள் கட்டிவைக்கின்றன. ஆனால் புதிய ஏற்பாட்டின் புரட்சிப் பெண்மணியாகிய நமது மகதலேனா மரியாள் மூடக் கட்டுப்பாடெனும் காட்டுக்குள்ளே ஊடுருவிச் சென்று இயேசுவைப் பின்பற்ற நமக்கு வழி வகுத்தாள். அல்லேலூயா! நாமும் அவ்வழியே சென்று அவள் பெற்ற ஆசீர்வாதத்தை அடைந்திடுவோம்.

இந்த மரியாள் பெரிய பரிசுத்தவாட்டியல்ல. ஏழு பிசாசுகளால் (பூரணமாய்!) கட்டப்பட்டிருந்து, ஆனால் ஆண்டவரால் பூரணமாய்க் கட்டவிழ்க்கப்பட்டவள் அவள் (லூக் 8:1-3). முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த மரியாளுக்கு மூதாதையரின் மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஆற்றலிருந்ததென்றால் 21ஆம் நூற்றாண்டிற்குள் நுழைந்துள்ள நமக்கு ஏன் அது இல்லை? தன்னை விடுவித்து இரட்சித்த ஆண்டவர் இயேசுவுக்காய் அவளது அன்பு கொழுந்துவிட்டெரிந்தது. இறுதிவரை அவரைப் பின்தொடர கிறிஸ்துவின் அன்பு அவளை நெருக்கி ஏவிற்று. தன் செல்வத்தை அவருடைய ஊழியத்திற்காகவே செலவிட்டாள். மட்டுமல்ல, "பட்டணங்கள்தோறும், கிராமங்கள்தோறும்" அவரைப் பின்பற்றத் தீர்மானித்தாள் (லூக் 8:1-3). முரட்டு மீனவர் சூழச் செல்லும் தச்சுப் பிரசங்கியாரின் பின்னே ஊர் ஊராய்த் திரிந்த இவள் வாயாடிகளின் வீம்புப் பேச்சுக்கு நிச்சயம் ஆளாகியிருப்பாள். ஆனால் வந்தது வரட்டுமென மரியாள் இயேசுவைப் பின்சென்றாள். தன் நேரம், பருவம், பணம், சுயம் யாவற்றையும் ஊழியத்தில் ஊற்றிவிட்டாள். ஒரு பெண் இயேசுவிற்குப் பணியாற்றத் தீர்மானித்தால் பழக்க வழக்கம் அவளைப் பின்னிழுக்க முடியுமா? சாட்சி சொல்ல பெண்கள் வெளியே செல்வது வழக்கமில்லையென்றால் மரியாள் ஒரு புரட்சிகரப் பெண்ணே!

இயேசு சிலுவையிலறையப்பட்டபோது மரியாளின் நினைவுகளெல்லாம் கனவாயின. நித்திய வாழ்வு அளிப்பார் என யாரை நோக்கிக்கொண்டிருந்தாளோ அவருடைய உயிரே போய்க்கொண்டிருந்தது. இறுதி மூச்சு இழுத்துக் கொண்டிருக்கும் குற்றவாளிகளின் தோற்றமும், கொடூரக் கொலைகாரரின் காட்சியும் இரத்தத்தைச் சுண்ட வைத்தன. ஆடவரே அதிர்ந்து விழும் அவ்விடத்தில் பெண்டிர் நிற்பரோ? ஆனால் மரியாள் பின்வாங்கவில்லை. ஆண்டவரோடு பாடனுபவிப்பதையே அவள் தெரிந்துகொண்டாள். அவருடைய தசைகளின் துடிப்பையும், வேதனையின் பெருமூச்சையும், நெஞ்சின் ஏக்கத்தையும் நோக்கிக்கொண்டேயிருந்தாள் (மத் 27:55,56). இன்று காணாமற்போன ஆடுகளுக்காய்க் கதறி நிற்கிறார் இயேசு. அவரோடுகூட கதறுவோமா? கெத்செமனே தோட்டத்தில் தமது இரத்தத்தின் பெருந்துளிகளைச் சிந்தின வேளையிலும் அவருடைய சீடர்கள் அவருடைய வேதனையில் பங்கேற்கவில்லை. இன்றும் உன்னைப் பார்த்து, "ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா" என்று கேட்கிறார். அருமைச் சகோதரியே, மரியாளைப் போல இயேசுவோடு பாடுபடுவதைத் தெரிந்துகொள்ளமாட்டாயா?

மரியாள் அங்கே நின்றுவிடவில்லை. இயேசுவின் உயிர் பிரிந்துவிட்டது. ஆனால் மரியாளின் அன்போ மங்காமல் பொங்கிப் பெருகியது. அன்பரின் பின்னே கல்லறைக்குச் சென்றாள். வெட்ட வெளிச்சத்திலல்ல; தட்டுத்தடுமாறும் மங்கிய சாயங்கால வேளையில்! பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் (1 யோ 4:18). என்னே அவ்வன்பு! அவரைக் கல்லறையில் வைத்துவிட்டு ஆண்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். ஆனால் மரியாள் அங்கே கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தாள் (மத் 27:60,61). தன்னந்தனியே ஒரு பெண்மணி சமாதிகளிடையே சந்திவேளையில் உட்கார்ந்திருக்கும் விந்தையென்ன? இறப்பு வரை உந்தித் தள்ளிய நிகரற்ற அவளது அன்பே! நேசம் மரணத்தைப்போல் வலியது (உன் 8:6). இறுதிவரை மரியாளைப்போல இயேசுவைப் பின்பற்றுவோம்.

விடியும்வரை காத்திருக்க மரியாளுக்குப் பொறுமையில்லை. இருள் இன்னும் அகலவில்லை. சீடர் நித்திரையாயிருந்திருப்பர். ஆனால் மரியாள் சேர்த்து வைத்திருந்த வாசனைப் பொருட்களைச் சுற்றி எடுத்துக்கொண்டு நகர வாசல்களைக் கடந்து நகரத்திற்கு வெளியே நடந்து சென்றாள். தன் ஆருயிரைத் தேடிச் சென்ற பெண்ணை அடித்துக் காயப்படுத்திய நகரக் காவலரைக் குறித்து அவள் கலங்கவில்லையோ? (உன் 5:7). இல்லை. அன்பின் அடைக்கலத்திற்கு மரியாளைக் கட்டி இழுத்தது அவளது பாசம். யோவான் 20:10,11 வசனங்களில் நாம் காண்பது என்ன? சீடர்கள்

தங்களுடைய இடத்திற்கு திரும்பிப் போனார்கள். ஆனால் மரியாளோ நின்று அழுதுகொண்டிருந்தாள். அவளை அசைக்கக்கூடியது ஒன்றுண்டோ ? அவள் தன் தீர்மானத்தில் உறுதியாயிருந்தாள். இரண்டு தேவ தூதர்களைக் கண்டபோதும் "பின்னால் திரும்பிப் பார்த்தாள்" (யோ 20:12-14). தூதரின் காட்சி அவள் துயரைத் துடைக்கவில்லையோ ? சீடரிடம் ஓடிச்சென்று அறிவிக்க அது ஓர் அற்புதமில்லையோ ? இயேசுவுக்குப் பதிலாய் அவள் எதையும் ஏற்க மறுத்தாள். இயேசு இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு, "அவரை எடுத்துக்கொள்வேன்" என்றாள். ஆ, என்ன அன்பு! "மரியாளே, வாழ்க" என்ற வாழ்த்து அவளுக்கே தகும்!

*பின்செல்வேனே, மீட்பர் பின்செல்வேனே,*
*எங்கேயும், எப்போதும் பின்னே செல்லுவேன்;*
*பின்செல்வேனே, மீட்பர் பின்செல்வேனே,*
*இயேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்!*



# 4

# "மிஸ் பைபிள்"

அழகிப் போட்டிகள் மலிந்திருக்கும் இக்காலத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவப் பெண்மணியும் இறைவனுடைய இதயத்திற்கு ஏற்றவாறு தன்னை அலங்கரிக்க அறிந்திருப்பது அவசியம். வேதப் பாணியில் உன்னை அலங்கரிப் பாயானால் நீ முத்துக்களைவிட விலையுயர்ந்த வளாவாய்.

முதலாவது, உன் பழைய ஆடையாகிய கோபம், மூர்க்கம், பொறாமை, தூஷணம், வம்புவார்த்தை ஆகியவைகளைக் களைந்துவிடு (கொலோ 3:8). உன் நேசர் இவைகளை உன்னில் காண விரும்பார். துக்க உடையை அகற்று (சங் 30:11). ஒடுங்கின ஆவி வேண்டாம் (ஏசா 61:11). அழுக்கான உன் சுயநீதிக் கந்தையை எறிந்துவிடு (ஏசா 64:6). சவுக்காரத்தினால் உன் நிறத்தை வெண்மையாக்கு (சங் 51:7).

இப்போது இராஜா ரசிக்கும் வகையில் உன்னை அலங்கரி. இதோ யோசேப்பின் அங்கியைப்போல் உனக்கும் ஒரு பலவருண ஆடை. மென்மையான இதுவே உனக்கேற்றது. உருக்கமான

இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை ஆகிய இளநூலால் நெய்யப்பட்ட சித்திரத்தையலாடையிது (கொலோ 3:12). இரட்சிப்பின் உடை உடுத்தி நீதியின் சால்வையைப் போட்டுக்கொள் (ஏசா 61:10). நாணத்தோடும் தெளிந்த புத்தியோடும் உன்னை அலங்கரி (1 தீமோ 2:9,10). துதியின் மேலாடையை அணிந்துகொள் (ஏசா 61:3). பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பின் ஒட்டியாணத்தைக் கட்டிக்கொள் (கொலோ 3:14). விலையுயர்ந்த கற்களாகிய நீடிய சாந்தம், தயவு, பொறுமை, நம்பிக்கை, விசுவாசம் ஆகியவை இதினின்று ஜொலிக்கும். இது தான் உன்னைப் பொறாமை, பெருமை, இறுமாப்பு, அயோக்கியம், தற்பொழிவு, சினம், தீங்கு ஆகியவற்றினின்று காக்கும். இது ஒருபோதும் அழியாத உயர்ரக அணிகலன் (1 கொரி 13:4-8). இப்போது மகிழ்ச்சி என்னும் வாரினால் உன்னை இடைகட்டிக்கொள் (சங் 30:11).

கூந்தலை வாரி ஆனந்த தைலத்தைப் பூசிக்கொள் (ஏசா 61:3). உன் தந்தையின் புத்திமதியை உன் சிரசுக்கு அலங்காரமாக சூடிக்கொள். தாயின் போதகமாகிய சரப்பணியைக் கழுத்தில் பூண்டு (நீதி 1:8,9), கிருபையாகிய சங்கிலியில் சத்தியமென்னும் தொங்கட்டத்தைக் கோர்த்து அணிந்துக்கொள் (நீதி 3:3). மெய் ஞானத்தையும், நல்லாலோசனையையும் பின்னி உன் கழுத்தை அலங்கரித்துக்கொள் (நீதி 3:21,22).

கையின் கடகமாம் கர்த்தரின் கட்டளையைக் கையில் கட்டு. அவருடைய வார்த்தையை உன் பிறைச்சிந்தாக்கு (உபா 6:8). உன் வாழ்க்கையை மிளிரச் செய்யும் உன் மோதிரம் தேவ ஆலோசனையே (நீதி 7:3). கீழ்ப்படிதலாகிய அழகிய காதணிகளால் உன்னை ஜோடித்துக்கொள் (நீதி 25:12).

அறிவை உன் உதட்டில் பூசு (நீதி 20:15). தேவன் உன் முகப் பொலிவிற்காக சாம்பலுக்குப் பதிலாக சிங்காரப் பவுடர் அளித்துள்ளார் (ஏசா 61:3). அவரளிக்கும் கண் மையையும்



வாங்கிக்கொள் (வெளி 3:18). உன் சாட்சியே தேவன் உன்னில் விரும்பும் நறுமணம் (2 கொரி 2:15). கிருபையும் இரக்கமுமே அவர் தரும் மகுடம் (சங் 103:4). சமாதானத்தின் நற்செய்திக் காலணியை அணிந்து (எபே 6:15), தேவ வசனமாகிய கண்ணாடி முன் நின்று (யாக் 1:23) உன் அழகைப் பார். அன்பரைச் சந்திக்க ஆயத்தம்தானே ? புதுப் பாடலோடும் (சங் 40:3), ஆனந்த நடனத்தோடும் (சங் 30:11) அவரைச் சந்திக்கப் புறப்படு. “என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை” என்ற அன்பரின் அரவணைக்கும் சத்தமே உனக்குப் பரிசு! (உன் 4:7).

*(இக்கட்டுரை இப்புத்தக ஆசிரியரின் அருமைத் தாயார் திருமதி எப்சி பாண்டியன் (1919–2005அவர்களால் எழுதப்பட்டது.)*

# 5

# பெண்களின் பேச்சுத் திறன்

முன்னொரு காலத்தில் எப்பிராயீமர் ஒன்றாய்க் கூடி கீலேயாத் தியருக்கு எதிராய்ப் போர் தொடுத்தனர். கீலேயாத்தியர் யோர்தா னின் துறைகளைப் பிடித்துக்கொண்டு அக்கரைக்குத் தப்பிப்போக வரும் எப்பிராயீமரைப் பிடித்து *'ஷிபோலேத்'* என உச்சரிக்கச் சொல்வார்கள். அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக் கூடாமல் *'சிபோலேத்'* என்பானானால் அவனை எப்பிராயீமன் எனக் கண்டு கொண்டு கொன்றுபோட்டனர் (நியா 12:1-6). அவர்கள் முடிவைத் தீர்மானிக்க எத்தனை சிறிய சோதனை! நாமும் யோர்தானைக் கடக்கும்போது நமது நித்தியத்தைத் தீர்மானிக்கும் சோதனையும் இதுவே. ஏனெனில், "உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்" என்று வேதம் சொல்லுகிறது (மத் 12:37). அடிக்கடி அலப்பும் நாம் இக்காரியம் என்னவென்று கவனிப்பது நல்லது.

பெண்கள் இயல்பாக நாவடக்கும் குணமற்றவர்கள். ஆதலால், அவர்களின் தன்மை அவர்கள் வார்த்தைகளால் அறியப்படும். நாம் வாயைத் திறந்தால் நம் இருதயத்தை வெளிப்படுத்துவோம். "உங்களில் ஒருத்தி தன் நாவை அடக்காமல் ... தன்னை தேவ



பக்தியுள்ளவள் என்று எண்ணினால் அவளுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்" என்று யாக்கோபு வரைவதினால் நாவடக்கத்தின் முக்கியத்துவம் புலப்படுகிறது (யாக் 1:26). அவர் நம்மைப் "பேசா திருங்கள்" என்று சொல்லாமல் "பேசுகிறதற்குப் பொறுமையாயிருங் கள்" என்றே சொல்லுகிறார் (யாக் 1:19). அதாவது, தேவையானபோது மட்டும், அதுவும் கருத்தோடு, பேசுதலே அவசியம். மனிதர் பேசும் வீணான வார்த்தைகள் யாவற்றிற்காகவும் நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்பு விக்கவேண்டும் (மத் 12:36). சோம்பல் வீண் பேச்சுக்கும், வார்த்தைகளின் மிகுதி மூடத்தனத்திற்கும் வழிகாட்டும் (பிர 5:3). சகோதரியே, உன் நாவைக் கட்டுவதற்குமுன் உன் பக்தியைக் குறித்து உயர்வாய் எண்ணி உன் இருதயத்தை வஞ் சித்துக்கொள்ளாதே.

### கோள் சொல்லுதல்

நாவின் இப்பாவம் ஆதிமுதலே தேவனால் "உன் மக்களுக் குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாதே" எனத் தவிர்க் கப்பட்டது (லேவி 19:16). ஆனாலும் ஓர் 'அன்பான சகோதரியின்' குறை 'அன்பான சகோதரிகளாலேயே' காட்டுத் தீ போல் பரவுவது ஏனோ? தேவ குடும்பத்தின் சகோதர சகோதரிகளுக்குள் கோள் சொல்லித் திரியவேண்டாம். ஒரு கும்பல் உன்னை வீண் பேச்சிற்கு வசப்படுத்துமானால் மனதைத் திடப்படுத்தி அங்கிருந்து விலகு. பாதகமில்லா பேச்சுதானே என நினைப்பாயானால், "சொற்களின் மிகுதியில் பாவமில்லாமல் போகாது" என்பதை நினைவிற்கொள் (நீதி 10:19). அலப்புகிறவர்களோடு இருப்பது தவிர்க்க முடியாது போனால் "உன் வாய்க்குக் காவல் வை" (சங் 141:3).

### முகத்துதி

எச்சரிக்கை! இப்பாவம் தாழ்மை என்னும் போர்வையோடு நடமாடும். பிறரைப் போற்றிப் புகழுதல் மாயமான தாழ்மை. மற்றவரைத் தூக்கிவைத்து திருப்தி செய்ய நினையாதே. அதன் முடிவு கேடு (நீதி 28:23). முகத்துதி செய்பவர்களை விட்டு விலகு. அவர்கள் உனக்குக் வலையைத்தான் விரிக்கிறார்கள் (நீதி 29:5). வாழ்வை

விரும்பி, நல்ல நாட்களைக் காண விரும்பினால் பொல்லாப்புக்கு உன் நாவையும், கபடத்துக்கு உன் உதடுகளையும் விலக்கிக் காத்துக்கொள் (1 பேது 3:10).

### எதிர்த்துப் பேசுதல்

வீண் வம்பு பேசாத சில பெண்களும்கூட ஒரு கடுஞ்சொல்லைக் கேட்கும்போது எதிர்பேசாமலிருக்க முடிவதில்லை. ஆயிரம் ஆண்கள் கூடி வாழ்ந்தாலும் இரண்டு பெண்கள் கூடி வாழ்வது கூடாத காரியமாம்! மாமியாரும் மருமகளும் சமாதானமாய் வாழ முடியாதது ஏன்? இருவரும் தங்கள் நாவை எதிர்பேசாமல் அடக்காததுதானே. அமைதியைக் கையாண்டு பார். பெண்ணுக்கு அமைதி பொன் போன்றது. என்ன ஆனாலும் எதிர்பேசுவதில்லை என்று தீர்மானிப் பாயானால் அநேக சண்டைகள் தீர்ந்துவிடும். தன் கணவனின் கடுஞ்சொல்லை எதிர்த்துப் பேசாமல் மனைவி பொறுத்துப் போவா ளானால் சமாதானமான வீடும் சாந்தமான கணவனும் தேடாமல் நாடி வருமே. நங்கையரே, பெற்றோரின் கடிந்துகொள்ளுதலை அமைதியாய்ச் சகித்தால் பிற்காலத்தில் உங்கள் கண்டிப்பான பெற்றோருக்காய்க் கர்த்தரைத் துதிப்பீர்கள். கண்ணீரில் தோய்க் காமல் கையாளப்படுமானால் அமைதியே அன்பின் ஆயுதம். கடுஞ் சொல்லைப் பொறுத்துப்போனால் கரையாத இருதயமும் கரைந்து விடும். "இனிய நாவு எலும்பை நொறுக்கும்" (நீதி 25:15).

### முறுமுறுத்தல்

உதடுகளில் முறுமுறுப்போடு பிறப்பவளே பெண்ணென்று எண் ணுகிறேன். பெண்களுக்கு முறுமுறுக்க கோடாகோடி காரணங் களுண்டு. ஆயினும் தேவன் முறுமுறுப்பை வெறுக்கிறார். எவரைக் குறித்தும், ஏன் எதைக் குறித்துமே, முறுமுறுக்க நமக்கு உரிமை யில்லை. ஏனெனில், எவ்வித முறுமுறுப்பும் தேவனுக்கு விரோத மானதே. "உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கின்றன" என்று மக்களைப் பார்த்து அன்றொரு நாள் தலைவர்கள் சொன்னார்கள் (யாத் 16:8). இதிலிருந்து மீள நம் மீட்பர் ஒரு வழியை வகுத்திருக்கிறார். அதுவே துதி. எப்பொ



ழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனைத் துதித்துப் பாருங்கள் (எபே 5:20). இப்படிச் செய்தால் நமக்கு முறுமுறுக்க காரணமோ நேரமோ இல்லாமல் போகும்.

### வளவளப்பு

ஓரிடத்தில் ஒரு செய்தியைப் பரப்ப வேண்டுமானால் அதை ஒரு பெண்ணிடம் சொன்னால் போதும். தவறாமல் அது தாவிச் செல்லும். இதை அறிந்துதான் இயேசுவும் தம் உயிர்த்தெழுதலின் நற்செய்தியை முதலாவது மரியாளிடம் சொன்னாரோ என்னவோ? நற்செய்தியையே பேசித் திரிவோமானால் வளவளக்கும் நாவும் வன்மையுள்ள ஆயுதமாகுமே. ஒரு பெண் தான் கதையளக்கும் வேகத்தில் இயேசுவுக்குச் சாட்சி சொன்னால் இன்றைக்குச் சுவிசேஷம் உலகத்தின் கோடிவரை எட்டியிருக்கும். நாமோ நம் தாலந்தைப் பயன்படுத்துவதில்லை. அந்த சமாரியப் பெண் ஒரு வாயாடியாகத்தான் இருந்திருக்கவேண்டும் (யோ 4). எனவேதான் இயேசு தண்ணீர் கேட்டவுடனே அவள் தராமல் வாய்பேச ஆரம்பித் தாள். தன் வார்த்தைகளினால் எத்தனையோ ஆண்களை மயக்கி யிருப்பாள். ஆனால் அவள் மனந்திரும்பியபோதோ, அநேகரை ஆண்டவரிடம் அழைத்துக்கொண்டு வந்தாள். அந்தக் கிராமத்தின் ஆடவரே சமுதாயத்தை விட்டுத் தள்ளப்பட்ட அவள் கூற்றை ஏற்றுக்கொண்டு "ஒரு மனிதனைக்" காண வெளியே வந்தார் களென்றால், கொஞ்சமாகவா பேசியிருப்பாள்? ஒரு கிறிஸ்தவப் பெண் தன் அயலார்மேல் தன் வார்த்தைகள் ஊடுருவிச் செல்லும் வல்லமையை மட்டும் உணர்ந்தவளாயிருப்பாளானால் அவளே இயேசு இராஜாவின் சுவிசேஷத்தை உந்தித்தள்ள வல்ல ஆயுத மாவாள்.

கிறிஸ்தவப் பெண்கள் தேற்றவும் திருத்தவும் தக்க திருவசனங் களை எச்சூழ்நிலையிலும் உடனுக்குடன் எடுத்துப் பகிரும் ஞானம் உடையவர்களாயிருத்தல் அவசியம். உலகக் கண்ணியில் சிக்கித் தவிப்போரை நிமிடந்தோறும் சந்திக்கிறோம். நாவில் நற்செய்தியும் வாயில் இறை வார்த்தையும் ஆயத்தமாயிருக்கட்டும். தாவீது

சொல்வதுபோல நம் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத் தாணியாயிருக்கட்டும் (சங் 45:1).

“இறப்பும் வாழ்வும் நாவின் அதிகாரத்தில் இருக்கின்றன.” *“சிபோலேத்”* என்று உச்சரிப்பது உன்னை மரணத்தில் கொண்டு விடலாம். ஒரே நாளில் *“ஷிபோலேத்”* என்ற உச்சரிப்பையும் நீ பயின்றுவிட முடியாது. ஏனெனில் நீ வாழும் உலகம் அப்படிப்பட்டது. ஆகவே இன்றிலிருந்தே நீ உன் நாவின் சொற்படி பேசாமல் உன் சொற்படி உன் நாவு பேச அதைப் பயிற்றுவி. இவ்விதமாய் இச்சிறிய உறுப்பு உன் ஆத்துமாவை மரணத்தினின்று ஜீவனுக்குத் திருப்பும் சுக்கானாக மாறும் (யாக் 3:4). “ஒருத்தி சொல் தவறாதவளானால் அவள் குறைவற்றப் பெண்” என்பதே பரிபூரணத்தின் உபதேசமாகும் (யாக் 3:2).



# 6

# அடுப்படியில் புறாக்கள்

வேதப் புதையல்களுக்குள்ளே பெண்களுக்கென்றே சிறப்பான ராஜரீக வாக்குத்தத்தம் ஒன்று மறைந்து கிடக்கிறது. பொதுவாகப் பெண்கள் வெள்ளியினாலும், பொன்னினாலும் தங்களை அலங் கரிக்க விரும்புவர். அதைவிட நம் “உள்ளான” நபர் அலங்கரிக்கப் படவே ஆசிக்கவேண்டும். நாம் யார் என்று அறியாமலே வெகுகால மாக “அடுப்படியில்” கிடந்தோம். நாம் எப்படி இருக்கமுடியும் என்று உணராமலே வெகுகாலமாக நம் “விதியை” நொந்துகொண்டிருந் தோம். ஆனால் “நீங்கள் அடுப்படியில் கிடந்தவர் களாயிருந்தாலும் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச் சிறகுகள் போலவும், பசும் பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார். சங்கீதம் 68:13இல் உள்ள இவ் வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்க நம் கண்களைத் திறக்கும்படி கர்த்தரைக் கேட்போம். தேவாலயத்தில் தூயராகவும், தெருக்களில் தேவ தூதராகவும் சமையலறையில் சாத்தானாகவும் இருப்பர் என்று பெண்களைக் குறித்துச் சொல்லப்படுவதுண்டு. ஆனால் கிறிஸ் துவை ருசித்த நாமோ சமையலறையிலும் பொற்புறாக்களாயிருக்

கலாம். இவ்வாக்குத்தத்தத்தைப் புரிந்துகொள்ள புறாவின் குணா திசயங்களை வேதத்தில் பார்ப்போம்.

வேதத்தில் புறா அடிக்கடி ஒரு **பலிப் பொருளாக** வருகிறது. பாவ நிவாரண பலிக்காக அது தேவாலயத்தில் விற்கப்பட்டது (லேவி 14:22). பெண்ணின் அழகு அவளது தியாக வாழ்வே. தனது நேரம், பலம், சுயம் ஆகியவைகளைக் குடும்பத்துக்காய்த் தியாகம் பண்ணுகிறாள். வீட்டில் பெண்தான் எப்பொழுதும் வாழ்வின் அரும் சுவைகளை இழக்கிறாள். பிள்ளைகளின் தவறுகளைத் தந்தைக்கு மறைத்து அதனால் வரும் வசவுகளை ஏற்பதும் தாயே. சுருங்கக் கூறின், அவளே வீட்டின் "இடிதாங்கி!" பரத்திலும் இகத் திலுமுள்ள தேவனுடைய முழுக் குடும்பத்துக்காகவும் நாம் தியாகம் செய்வோம் (எபே 3:14). அன்பு தனக்கென்று சுயநலமாய் எதையும் நாடாது (1 கொரி 13:5).

புறா **கபடற்றது** (மத் 10:16). அது குற்றமற்றது. மென்மை யானது. பெண்களை 'வஞ்சகர்' என்பர். என்றாலும் மாற்ற வல்ல மாபெரிய கர்த்தர் நம் குணத்தை மாற்றுவார். எவரும் நம்மைக் கண்டு ஒதுங்காதபடியும், நம்மை ஒதுக்கிவிடாதபடியும் குற்றமற்ற வர்களாயிருப்போம். "அன்பு தீங்கு நினையாது" (1 கொரி 13:5). எப்பொழுதும் தேவனுடைய குடும்பத்துக்கு நன்மையே செய்வோ மாக (நீதி 31:11,12).

புறா தன் **வீட்டை நேசிக்கும்** பறவை. "மேகத்தைப் போலவும், தங்கள் பலகணித் துவாரங்களுக்குத் தீவிரிக்கிற புறாக்களைப் போலவும் பறந்து வருகிற ..." (ஏசா 60:8). தூது சொல்லும் புறாக் களின் இரகசியம் இதுவே. தேவன் நமக்குத் தந்த முதல் பணிக்களம் நமது இல்லமே. பிள்ளைகள் நமது பொறுப்பு. ஒரு பெண் நன்மைக் காகத் தன் கணவனை எவ்வளவாய் வசப்படுத்தலாம்! 'பெண்கள் சொல்லுவதைப் பொறுத்ததே எல்லாம்' என்று எத்தனை தரம் நாம் கேட்கிறோம். அது உண்மை. நேசிக்கவேண்டிய விதமாய் நம் குடும்பத்தை நாம் நேசிக்காவிடில் தேவன் நமக்குத் தந்தவைகளில்



மிகச் சிறந்ததை நாம் செய்ய முடியாது. ஒரு பெண் தன் போத கருக்கு இப்படி எழுதினாள்: "ஐயா, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பூமியின் எல்லை யெங்கும் செல்ல விரும்புகிறேன். ஆனால் எனக்கு 12 பிள்ளைகள் இருக்கின்றனர் ..." அதற்குப் போதகர்: "சகோத ரியே, 12 பேருள்ள ஒரு சபையை ஏற்கனவே தேவன் உங்களுக்குக் கொடுத்ததற்காக தேவனைத் துதிக்கிறேன்" எனப் பதிலெழுதினார். உங்கள் வீட்டில் குடும்ப ஜெபம் உண்டா? சாப்பிடுமுன் உங்கள் பிள்ளைகள் ஜெபிக்கிறார்களா? வேதாகம வீரர்களின் சரிதை களைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருகிறீர்களா? பிள்ளைகள் இயேசுவை நேசித்து எல்லாவற்றிற்கும் அவரைச் சார்ந்திருக்கப் பழகுகிறார்களா? அந்நாளில் உங்கள் மகனோ, மகளோ நியாயந் தீர்க்கப்படும்போது ஆசிரியரும், போதகரும் உங்களுக்குப் பின்னா கத்தான் நிற்பர். புறாவைப் போல நமது வீட்டை நேசிக்கப் பழகி நித்திய வீட்டையும் நினைவில் வைப்போம்.

காட்டுப் புறாவின் சத்தம் வசந்த காலத்தின் வரவை **அறிவிக்கும்**. "இதோ, மாரிகாலம் சென்றது, மழைபெய்து ஓய்ந்தது; பூமியிலே பூக்கள் காணப்படுகின்றன; குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப் புறாவின் சத்தம் நமது நாட்டில் கேட்கப்படுகிறது" (உன் 2:11,12). வசந்தனாம் நமது நேசரின் வருகையை அறியாமல், பூக்கும் பூக்களின், பாடும் குருவிகளின் அறிவிப்பைப் புரியாமல், ஆழ்ந்த தூக்கத்திலிருக்கும் நமது நாட்டின் காட்டுப் புறாக்கள் நாமல்லவா? "சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த மலையில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு; பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங் களை நோக்கி, இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார். இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடுகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவரு டைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது" (ஏசா 40:9,10). காட்டுப் புறாவே,

பயப்படாமல் சத்தமிட்டு, கர்த்தராகிய ஆண்டவர் வருவார் என்று சொல்! அழியும் ஆத்துமாக்களின் தரிசனத்தால் உன் புறாக் கண்கள் நிரம்பட்டும்!

புறா **துயரத் தொனி பாடும் தன்மை** உடையது. அக்காலத்தில் ‘‘தாதிமார் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, புறாக்களைப் போலச் சத்தமிட்டுக் கூடப் போவார்கள்’’ (நாகூம் 2:7). நமக்கும் இவ்வித சுபாவத்தைக் காரணமின்றி தேவன் தரவில்லை. ஒரு கண்ணிமைப்பொழுதில் அழுதுவிடும் சுபாவத்தைத் தேவனே நம்மில் வைத்தார். அழிந்துபோகிறவர்களுக்காகப் பெண்கள் ஜெபிப்பது போல வேறெவரும் ஜெபிக்க இயலாது. புலம்பும் பெண்கள் குழுக்களினாலேயே அடிக்கடி எழுப்புதல் துவங்கியிருக்கிறது. உடைப்பில் நின்று கண்ணீரால் தங்கள் நாட்டை இரட்சிப்போர் தேவனுக்குத் தேவை. ‘‘சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியளவு கண்ணீர் விடு. ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்பு விழி சும்மாயிருக்கவிடாதே. எழுந்திரு, இரவிலே முதற் சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் உயிருக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு’’ (புல 2:18,19). ஜெப அறையிலுள்ள உங்கள் கண்ணீர் சீனாவிலுள்ள ஓர் ஆத்துமாவை இரட்சிக்கும்.

புறா **பயந்த சுபாவம்** உள்ளது. ‘‘எகிப்திலிருந்து குருவிகளைப் போலவும், அசீரியா தேசத்திலிருந்து புறாக்களைப் போலவும் பயந்து வருவார்கள். அப்பொழுது அவர்களை அவர்கள் வீடுகளில் குடியிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (ஓசி 11:11). கர்த்தருக்குப் பயப்படுதலே உங்கள் வீட்டின் அடித்தளம். புறா கன்மலையில் வசிக்கிறது. ‘‘கன்மலையில் தங்கி, குகையின் வாய் ஓரங்களில் கூடு கட்டுகிற புறாவுக்கு ஒப்பாயிருங்கள்’’ (எரே 48:28). வீட்டில் நடக்கும் எந்த அசம்பாவிதத்தின் தாக்குதல்களையும்



தாங்குவது பெண்ணே. பெண்ணின் உலகம் குழப்பம் மிகுந்தது. இரட்சிக்கப்படாத கணவன், கீழ்ப்படியாத மகன், அடங்காத வேலைக்காரி, சுகவீனமான குழந்தை, உடல் பலவீனம், பண நெருக்கடி போன்றவை கவலைக் கடலில் நம்மை இங்குமங்கும் அலைக்கழிக்கின்றன. ஆயினும் நம் இரட்சிப்பின் கன்மலையில் ஒதுக்கிடம் தேடுவோம். சங்கீதக்காரனின் ஆசையும் ஒரு வீட்டுப் பெண்ணைப் போன்றதே. ‘‘ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால் நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்’’ என்று பெருமூச்சு விடாதே (சங் 55:6). தேவனோடு உன் அமைதி நேரத்தைக் குறித்துக் கொண்டு, கன்மலையில் தங்கி, பலத்தைப் புதுப்பித்துக்கொள்.

உன் நேசரும் உன் முகத்தைக் காண, உன் சத்தத்தைக் கேட்கக் காத்திருக்கிறார். ‘‘கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே! உன் முக ரூபத்தை எனக்குக் காட்டு; உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும் உன் முக ரூபம் அழகுமாயிருக்கிறது’’ (உன் 2:14). அவரே அடுப்படியில் கிடக்கும் நம்மை வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச் சிறகுகள் போலவும், பசும் பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் மாற்றுவார். நாம் அவருடைய நேசப் புறாக்களல்லவா? (உன் 5:2; 6:9).

# 7

# உன்னதத்திருந்து உதவி

❐ *பெயர்செபாவின் வனாந்தரத்தில்* ***ஆகார்*** *தன் பிள்ளையை வைத்துக் கொண்டு ஆதரவற்று அங்கலாய்த்துக்கொண்டிருந்தாள்.*

"தேவ தூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு, ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது ? பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார் என்றார். தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். தேவன் பிள்ளையுடனே இருந்தார்" (ஆதி 21:1-20).

❐ ***அன்னாள்*** *தனக்குப் பிள்ளையில்லாததால் தன் சக்களத்தியினால் விசனப்படுத்தப்பட்டு சாப்பிடாமல் அழுதுகொண்டிருந்தாள்.*

"கர்த்தர் அவளை நினைத்தருளினார். சிலநாள் சென்றபின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்குச் சாமுவேல் என்று பேரிட்டாள்" (1 சாமு 1:19,20).



❐ ***சாரிபாத் விதவை*** *தானும் தன் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக, தன்னிடத்திலிருந்த ஒரே பிடி மாவை அவளுக்கும் அவனுக்கும் ஆயத்தப் படுத்துகிறதற்கு விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள்.*

"எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே ... கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மாவு செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார். அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள் ... கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின் படியே, மாவு செலவழிந்து போகவும் இல்லை; எண்ணெய் குறைந்து போகவும் இல்லை" (1 இரா 17:14-16).

❐ ***நாயீன் ஊரிலுள்ள விதவை*** *இறந்துபோன தனது ஒரே மகனை அடக்கம்பண்ணும்படி அழுதுகொண்டு போய்க்கொண்டிருந்தாள்.*

"கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி கிட்ட வந்து பாடையைத் தொட்டார் ... அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக் 7:12-15).

❐ ***ஒரு பெண்*** *தனக்குள்ளதையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவராலும் குணமாக்கப்படாமல் பன்னிரண்டு ஆண்டுகளாய்ப் பெரும் பாடுள்ளவளாயிருந்தாள்.*

"அவள் இயேசுவுக்குப் பின்னாலே வந்து, அவருடைய ஆடையின் ஓரத்தை தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்று போயிற்று ... இயேசு: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்" (லூக் 8:43-48).

❐ ***ஒரு சமாரியப் பெண்*** *சிற்றின்ப மயக்கத்தில் தன் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டு திருப்தியற்றவளாயிருந்தாள்.*

> “இயேசு அவளை நோக்கி: நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். அந்தப் பெண் அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும் ... இருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்” (யோ 4:14,15).

❐ ***மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமே*** *ஆகியோர் கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.*

> “அப்பொழுது கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான் ... தூதன் அந்தப் பெண்களை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; இயேசு உயிர்த்தெழுந்தார் ... சீக்கிரமாய்ப் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று ... சொல்லுங்கள் என்றார்” (மாற் 16:1-3; மத் 28:2-7).



# 8

# “டாக்டர் ஜீசஸ்”

Dr. ஜீசஸ்சை உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் “இயலாமை நிபுணர்” Master of Impossibilities! (M.I.). எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் அவரிடம் சிகிச்சைக்குச் செல்லலாம். நடு இரவில் வந்து தொல்லை கொடுக்கிறீர்களே என்று முணுமுணுக்கவே மாட்டார். அவரது கட்டணம் “கடுகு விதையளவு விசுவாசம்” மட்டுமே. அவர் அங்கீகாரம் பெற்ற மருத்துவர். “விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.” கட்டணத்தைக் கைமேல் கொடுத்தால்

**யேகோவா-ரப்பா**
**மருத்துவமனை**

IN
உள்ளே

**Dr. ஜீசஸ், M.I.**
(பதிவு எண்: மத் 28:18b)
பார்க்கும் நேரம்: காலை 6-00 முதல் காலை 6-00 வரை
அவசர கேசுகள் எல்லா நேரத்திலும் பார்க்கப்படும்.
தொலைபேசி எண்: 91:15
**இல்லாக்கிழமை விடுமுறை**

குணம் பெறாமல்போவதே கிடையாது. இந்த டாக்டரைப்போல் இன்னொருவரைப் பார்க்கவே முடியாது. இவரது சிகிச்சைகளெல்லாம் அதிசயம் என்று பலரும் பாராட்டியுள்ளனர். “இப்படி ஒருபோதும் பார்த்ததில்லை” என்றார்கள் (மத் 9:33). இதுதான் அவரது பெயர்ப் பலகை —

ஒரு வார வைத்தியம் என்பது அவரிடம் கிடையாது. எல்லாமே “உடனடி” சுகம்தான். நிபந்தனைகளைச் சொல்லித் தடுமாற வைப்பதில்லை. நிபந்தனைகளில்லாமல் குணமாக்கிவிடுவார். அவர் எப்பொழுதும் யாரையும் பத்தியம்போட்டு வதைக்கமாட்டார். காயக்கட்டுகளையோ, மாவுக்கட்டுகளையோ அவர் மருத்துவ மனையில் பார்க்க முடியாது. பூரண சுகம்தான். அங்கு அழுக்கறத் துடைக்கும் “ஸ்பிரிட்” அவரது தூய ஆவியே. ஊசியால் குத்துவதில்லை; இதமாய்த் தொடுவார். அவ்வளவுதான். நோயாளிகளின் வேதனையை உணர்ந்துகொள்ளும்படி அவர் “வியாகுல மருத்துவக் கல்லூரியில்” பட்டம் பெற்றவர். எனவே அவரது நாற்காலிக்கருகில் தைரியமாய்ப் போகலாம் (எபி 4:15,16). அவருக்கு விடுமுறையே கிடையாது. இரவும் பகலும் “ட்யூடி”தான். நமக்குக் காவலாயிருக்கும்படி அவர் இரவு களில்கூட ஓய்வெடுப்பதில்லை. சந்திரனால் பித்தமும் வருவதில்லை. சூரியனால் வெப்பத்தாக்கும் அணுகுவதில்லை. ஏனெனில், அவைகளெல்லாம் அவருக்குக் கட்டுப்பட்டவைதானே ? (சங் 121:3,4,6). அவர் கொடுக்கும் அற்புத மருந்து என்னவாயிருக்கும் என்று விழிக்கிறீர்களா ? அவரது மாத்திரை அவர் வார்த்தையே! (சங் 107:20).

அவருடைய மருத்துவமனை எப்போதும் நிரம்பி வழியும். ஏன், சில வேளைகளில் மேற்கூரையைக்கூடப் பிரித்து அவர்முன் மக்கள் இறங்கி விடுவார்கள். அவருக்கோ கோபம் வராது (மாற் 2:1-12). நோயாளிகள் அவரை நெருக்கிக்கொண்டிருந்தாலும் அவர் சற்றும் பொறுமையிழக்காமல் மனதுருகுவார் (மத் 14:14). அவரது மருந்தகத்தின் மேற்கூரையிலேயே ஆரோக்கியம் இருக்கும் (மல் 4:2).



அவர் முகத்திரை அணிவதேயில்லை. ஏனெனில், தன்னுடைய நோயாளிகளின் நோய்க்கிருமிகள் தன்னைத் தாக்கும் என்ற அச்சம் அவருக்கு அணுவளவேனும் இல்லை. உங்களுடைய அர்த்தமற்ற கேள்விகளையோ பதில்களையோ கேட்டுச் சீறி விழவே மாட்டார். இந்த உலகத்திலேயே எல்லாரையும் புரிந்துகொள்ளுகிற மருத்துவர் அவரைப்போல் ஒருவருமில்லை. நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் நிதானமாகப் பதில் சொல்லுவார்.

எக்ஸ்ரே படமோ, இரத்தப் பரிசோதனையோ அவருக்குத் தேவையில்லை. உங்கள் வியாதியின் காரணத்தை அறிய உங்கள் கதை எல்லாவற்றையும் கேட்டு ஆராயவேண்டிய அவசியமும் இல்லை. உங்கள் அமைப்பும் சரித்திரமும்தான் அவருக்குத் தெரியுமே! (சங் 103:14; யோ 1:48).

பன்னிரெண்டு ஆண்டுகளாய் “மெனொரேஜியா” இரத்தப் போக்கினால் அவதியுற்று, சொத்தெல்லாம் வைத்தியருக்குக் கொடுத்தும் சுகமே கிடைக்காத ஒரு பெண்ணை எனக்குத் தெரியும். இனி சுகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே அவளுக்குப் போயிற்று. அதிகச் சோர்பு, ரத்தசோகை. ஒரு நாள் யாரோ ஒருவர் டாக்டர் ஜீசஸ்சைக் குறித்து அவளிடம் சொல்ல, கடைசியாக இந்த டாக்டரையும் பார்த்துவிடுவோமே என்று எண்ணினாள். கூட்டத்தோடு கூட்டமாய்ப் பார்த்துப் போய்விடலாமென எண்ணினாள். அவரோ தன் நோயாளி ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைப்பவர். அந்தக் கூட்டத்திலும் அவர் அவளை அடையாளம் கண்டுகொண்டார். வரிசையில் நின்று வராததாலோ, தன்னைத் தொட்டதினாலோ அவர் அவள்மீது எரிந்து விழவில்லை. அவர் அவளைத் தேற்றி, ஏற்கனவே கட்டணத்தை அவள் செலுத்திவிட்டதால், “சுகமடைந்தாய், போ” என்றார். என்னே, அவர் கைராசி! கட்டுக் கதையாய்த் தெரிகிறதா ? டாக்டர் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த டாக்டர் லூக்கா அவர்கள் டாக்டர் இயேசுவிடம் சிகிச்சை பெற்றோரின் அற்புத சுகங்களைப் பூரணமாய் ஆமோதித்துள்ளார்

(லூக் 8:43-48). இப்படி இன்னும் அற்புதமாய்ச் சுகமடைந்த அநேகரைக் குறித்து எனக்குச் சொன்னார்.

நீண்டநாள் மூட்டுவாத நோயினால் அவதிப்பட்ட மற்றொரு நோயாளியாகிய (அதை முடக்குவாதம் என்றுதான் நான் சொல்வேன்!) அந்த மாது கூனியாயிருந்தாள். டாக்டர் இயேசு தமது கைகளால் அவளைத் தொட்டார். அவ்வளவுதான், அவளுடைய கட்டுகள் தளர்ந்து, உடனே அவளுடைய முதுகெலும்பில் எண்ணெய் ஊற்றப்பட்டதைப்போல் நிமிர்ந்து நின்றாள். நம்ப முடியவில்லையா ?

டாக்டர் ஜீசஸ் அனுபவமுள்ள மனநோய் மருத்துவரும்கூட. ஒரு நாள் அவருடைய உதவியாளர்கள் தங்களால் குணமாக்க முடியாத ஒரு நோயாளியைக் கொண்டுவந்தார்கள். ஆனால் மூளைக் கோளாறுக்குக் காரணமான பிசாசை அவர் அதட்டினார். அவ்வளவுதான். அந்த இளைஞன் அப்பொழுதே சுகமானான் (மத் 17:15,18). ஆம், கூடாதவைகளைச் செய்வதில் நிபுணர்தான் அவர். "மனிதரால் இவைகள் கூடாததுதான், ஆனால் என்னால் எல்லாம் கூடும்" என்று அவர் முழங்கினார். மன நோய்க்கு அவர் அருளும் சிகிச்சை சாதக அறிக்கையே. பலவீனனும் தன்னைப் பலவானென்று சொல்ல வேண்டும்! 2000 ஆண்டுகளுக்கு முன் அவர் சொன்னதைத்தான் இன்றும் சொல்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்!

குழந்தைச் செல்வமற்ற அநேகரும் டாக்டர் ஜீசஸின் சிகிக்சையால் சுகம்பெற்றது எனக்குத் தெரியும். திருமதி சாராள் ஆபிரகாம் எந்த சிகிச்சையாலும் குணம் பெற இயலாத அளவு கிழவி. இனி எந்த இயக்கு நீரும் (ஹார்மோன்) D&Cயும் உதவாது. நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாமற்போனாலும் சரி, அவள் அவரை அப்படியே விசுவாசித்தாள்; தனது 90ஆவது வயதில் பிள்ளையைப் பெற்றெடுத்தாள்! திருமணமாகி இத்தனை ஆண்டுகளான பின்பு கருத்தரிப்பு! ஈசாக்கு தம்பதிகளை நீங்களும் அறிந்திருப்பீர்கள். மிக நல்லவர்கள், ஆனால் பிள்ளையில்லை. ஒரே ஒருமுறை நம்பிக்கை



யோடு ஆலோசனை கேட்டனர். அவ்வளவுதான். உடனே அவள் கருத்தரித்து இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். திருமதி ராகேல் யாக்கோபும் அப்படியே. அவளுக்கும் பிள்ளையில்லாதபடியினால் குழந்தையுள்ளவர்களைக் கண்டு பொறாமையினால் விம்மினாள். ஓயாமல் தனது கணவனோடு சச்சரவு செய்து தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்துவிட்டாள். ஆனால் இந்த வைத்திய மன்னர் அவளைக் குணமாக்கினார். அவள் இரண்டு ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள்.

மருத்துவர்கள் பெரும்பாலும் தங்கள் மருத்துவத்துறை நுணுக்கங்களை இரகசியமாய் வைத்துக்கொள்வர். ஆனால் நமது டாக்டரோ தனது உதவி யாளருக்கு எல்லாவற்றையும் சொல்லிக்கொடுத்து, தனது துறையில் அவர்களுக்கும் நல்ல பயிற்சியளித்தார் (லூக் 9:1). மக்கள் வேதனையில் தவிப்பதைக் கண்டு சகிக்க முடியாதவராய் அவர்களைப் பல இடங்களுக்குச் சாலையோர மருத்துவமனைகளை அமைக்கும்படி அனுப்பி வைத்தார். இவரைப் போல் கனிவுள்ளம் கொண்டவரை இதுவரையில் நான் கண்டதேயில்லை. வியாதியில் ஒருவராவது வாடுவது அவருக்கு விருப்பமேயில்லை. ஒரு தொழுநோயாளி ஒரு சமயம் அவரிடம், "உமக்கு விருப்பமானால் என்னைக் குணமாக்கும்" என்று கேட்டார். உடனே, "எனக்கு விருப்பமுண்டு, சுத்தமாகு" என்று அழுத்தமாய் அறிவித்தார். சுகமானார்! தொழுநோய் நிபுணர்!

இவர் புகழ் வாய்ந்த "அறுவை சிகிச்சை" நிபுணரும்கூட! முதலாவது விலா எலும்பு அறுவை சிகிச்சையை மயக்க மருந்தில்லாமல் தூக்க மயக்கத்திலேயே வெற்றிகரமாய்ச் செய்து முடித்தார் (ஆதி 2:21). இவருடைய அறுவைக் கத்தி ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபி 4:12). எந்த அறுவை மருத்துவரும் செய்யக்கூடாத, கேள்விப்பட்டிராத மருத்துவ நுட்பத்

தோடு, உடைந்த இருதயங்களைக் காயம் கட்டுகிறார் (லூக் 4:18). இவர் தலைசிறந்த “இருதய சிகிச்சை” நிபுணர்! இவரால் மாற்று இருதயம் பொருத்தப்பட்டவர்கள் எல்லாரும் உயிர் பிழைத்துள்ளனர் (எசேக் 36:26). இவரது அறுவை சிகிச்சையின் தையல் நூல் “அன்பு”தான்.

இவர் செய்த எல்லா சிகிச்சைகளையும் பதிவேட்டில் எழுதினால் உலகம் கொள்ளாதென்று நினைக்கிறேன் (யோ 21:24). நான் இவரை என் குடும்ப டாக்டராக்கிவிட்டேன். அதற்காக நான் என்றுமே வருந்தியதில்லை. நீங்களும் ஏன் இவரை உங்கள் டாக்டராக ஏற்றுக்கொள்ளக்கூடாது ?



# 9

# நேசமா, மோகமா?

இளமை துளிர்விட்டு வாலிபம் மலரும்போது, கன்னியின் இதயத்தில் வண்ண எண்ணங்கள் பொங்கி வழியும். ஆனால் அவள் கண்களோ வாலிபரின் வசீகரிக்கும் நடத்தையால் வண்ண மலரின் மென்மையான இதழுக்கடியில் மறைந்துள்ள முட்களைக் காணமுடியாமல் குருடாக்கப்பட்டிருக்கின்றன. என் அருமைப் பிள்ளையே, கவனமாயிரு! காலம் பிந்திய பின் அவை உன்னை எச்சரிக்க அல்ல, புண்படுத்தவே குத்தும். சிறகடித்துப் பறக்கத் துடிக்கும் பருவத்திலுள்ள இப்பரந்த உலகில் மறைந்திருக்கும் கண்ணிகளை அறியாய். உன் உள்ளுணர்ச்சிகளுக்கு உணவூட்ட இயற்கையன்னை தன் மாயாலோகத்திற்கு உன்னைக் கரம் நீட்டி அழைக்கிறாள். ஆனால் அவளது மடியில் அடைக்கலம் புகுமுன் சற்றே நின்று, “இதுவே வழி, இதிலே நடந்திடுங்கள்” என்ற இன்குரல் கேட்டுப் பாதுகாப்பான பாதையைக் கண்டுபிடித்து அதிலே நட.

மோகத்தை நேசமெனக் கணித்து மிருக இச்சைகளுக்கு இரையான கன்னியர் கணக்கற்றோர். ஐயகோ, கன்னிப் பூமியில் காணக்கூடா கானகப் பாதை ஒன்று பதிந்துவிட்டதே! களங்கமற்ற

வாழ்க்கையில் அழியாக் கறை ஒன்று படிந்துவிட்டதே! மறக்க முடியா சோக சிந்தனை இளம் உள்ளத்தில் குடிகொண்டுவிட்டதே! வாலிபர் தங்கள் வழியை எதினால் சுத்தம் பண்ணுவார்கள்? திருவசனத்தின்படி தங்களைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே (சங் 119:9). கறைப்படாமல் உன்னைச் சுத்தமாய்ப் பாதுகாக்க ஒரே வழி இதுவே. அறிவைப் புகட்டும் பொருள் நிறைந்த சம்பவம் ஒன்று விவிலியத்தில் உள்ளது. 2 சாமுவேல் 13ஆம் அத்தியாயத்திலுள்ள அச்சம்பவத்தை முதலில் வாசித்துவிட்டுப் பின்பு இக்கட்டுரையைத் தொடர்ந்து வாசி.

தாமார் என்பவள் ஓர் அழகான கன்னிப் பெண். அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய அம்னோன் அவள்மீது மோகம் கொண்டான். அவள் ஒரு கன்னியாயிருந்தபடியால், சன்மார்க்க எண்ணம் கொண்ட அம்னோனுக்கு அவளுக்குத் தீங்கு செய்ய வருத்தமாயிருந்தது. ஆனால் அவள்மேல் கொண்ட தீரா மோகத்தினால் வியாதிப்பட்டான். அம்னோனின் சிநேகிதனும் மகா தந்திரவாதியுமான யோனதாப் அம்னோனின் ஏக்கத்தின் காரணத்தை அறிய முற்பட்டான். அம்னோனும் புத்தியீனமாக உண்மையை உளறிவிட்டான். யோனதாப் தன் நண்பனுக்குத் தவறான ஆலோசனை கொடுத்தான் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அம்னோனும் அந்த நெறிகெட்ட யோசனையையே பின்பற்றினான். அதன்படியே அம்னோன் நோயுற்றவன் போலப் படுத்துக்கொண்டு தன் தந்தை தன்னைக் காண வரும் வேளையில், தாமார் தன் கண் முன்னே சமைத்துத் தனக்கு உணவளிக்கக் கட்டளை கொடுக்க விண்ணப்பித்தான். வேலையில் மூழ்கிய, கரிசனையற்ற, அவன் தந்தையும் அதற்கு தயைசைத்துச் சென்றான். அதன்படியே தாமார் வந்து அவன் முன்னிலையில் சமைத்து உணவு பரிமாறும் வேளையில் அவன் உண்ண மறுத்தான். அப்பொழுது அம்னோன் அங்கிருந்த மனிதர் அனைவரையும் வெளியே போகச்செய்து தாமாரிடம் உணவை உள்ளறைக்கு எடுத்துவரச் சொன்னான். தாமாரும் மறுப்பேதுமின்றி ஏன் இதற்கு உடன்பட்டாள் என்பது புரியாத



புதிரே. அவள் சம்மதித்து உள்ளறைக்கு உணவைக் கொண்டுவந்த போது அம்னோன் அவளைத் தன்னோடே படுக்கும்படி வற்புறுத்தினான்.

தாமார் ஓர் உத்தமி. ஆகவே அவள் அதற்கு மறுத்து அம்னோனுக்குப் புத்தி சொன்னாள். ஒரு கன்னிப் பெண்ணைப் பலவந்தம் பண்ணுதல் இஸ்ரவேலின் சட்டங்களுக்கு விரோதமானது. ஆனால் அம்னோன் மட்டும் தன் தகப்பனிடம் தாமாரைத் தனக்குக் கொடுக்க வேண்டியிருந்தால் தாவீது அதற்கு இணங்குவது நிச்சயம். திருமணமானபின் குற்றமற்ற நெஞ்சோடு எல்லாச் சம்போகங்களையும் அனுபவிக்கலாமே. ஆனால் உபதேசங்களும் புத்திமதிகளும் மோகத்தின் உச்சக்கட்டத்தில் உதவுமோ? காதலுக்குக் கண் இல்லையானால் காமத்துக்குக் காது இல்லை. அம்னோன் பலசாலியானதால் பலவந்தம் பண்ணி அவளைக் கற்பழித்தான். அவனுடைய காமவெறி அடங்கியபின் நேசம்போல் தோன்றிய அவனது மோகம் இமைப்பொழுதில் மறைந்தது. அவன் அவளை விரும்பிய விருப்பத்தைப் பார்க்கிலும் அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. அப்பொழுது அவன் தாமாரை வெளியே போகக் கட்டளையிட்டான். தாமாரோ கெஞ்சினாள். "நீ எனக்கு முந்தி செய்த அநியாயத்தைவிட இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிற அநியாயம் கொடுமையாயிருக்கிறது" எனக் கதறினாள். அம்னோனோ அதைச் சட்டைபண்ணவில்லை. அவளை வெளியே தள்ளிக் கதவை அடைத்தான். தாமார் தன் தலையில் சாம்பலைப் போட்டுக்கொண்டு தன் பலவர்ண ஆடையைக் கிழித்து, தலையில் கை வைத்துப் புலம்பிக்கொண்டே போனாள். தாமார் தன் சகோதரன் அப்சலோம் வீட்டில் தஞ்சம் புகுந்து தனித்து நொந்துகொண்டிருந்தாள். ஈராண்டுகளுக்குப்பின் இதற்காக அப்சலோம் அம்னோனைக் கொலை செய்து பழிவாங்கினான்.

அருமைப் பிள்ளையே, தாமாரின் கதி உனக்கு எச்சரிப்பாயிருக்கட்டும். தாமார் ஒழுக்கமாய் வளர்க்கப்பட்டு சன்மார்க்க நெறிகளில்

உத்தமியாய், புத்திக்கூர்மையுடன் திகழ்ந்தவள். எளிதில் சோதனைக்கு இடங்கொடாமல், கட்டுப்பாடுள்ளவளாயிருந்தாள். இஸ்ரவேலின் திருச்சட்டங்களையும் நன்கு அறிந்திருந்தாள். அப்படியிருக்க அவளது குற்றம்தான் என்ன? உலகமறியா அப்பாவித்தனமே அவளது குறை. அதாவது அறியாமையே அவளது வீழ்ச்சிக்கு அடிகோலிற்று. தன் சகோதரன் தன்னை மட்டும் விரும்பி அழைத்ததனால் மேட்டிமையுற்றாள் போலும்! ஆகவே அவனுக்கு சமைக்கச் சென்றாள். அம்னோன் அங்கிருந்த அனைவரையும் வெளியே அனுப்பியபோதும் அவள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே. தனியே தன்னை உள்ளறைக்கு அழைத்தபோதும் தடை செய்யவில்லையே. தன்னை நேசித்த ஆடவனைத் திருப்தி செய்வதில் அளவுகடந்துவிட்டாள். ஆனால் இதற்குள்ளாக அம்னோனின் நோக்கத்தை நிச்சயமாக அவள் யூகித்திருப்பாள். அம்னோனைத் தன்கிட்ட நெருங்கவிடாமல் கவனமாயிருந்து, ஆனால் அவனுடன் ஆனந்தமாய் பொழுதுபோக்கலாமென எண்ணியிருப்பாள். திருமணத்திற்கு முன் ஓர் ஆடவனோடு பாலுறவு கொள்வதை மானக்கேடாக எண்ணினாள் (2 சாமு 13:13). ஆனால் தப்ப முடியா கண்ணியில் ஏற்கனவே சிக்கிக்கொண்டாளே! இப்போது அவள் விட்டுக்கொடுத்தாக வேண்டிய நிலையாயிற்று. ஆயினும் அம்னோன் தன்னை இவ்வளவாய் நேசித்தபடியால் இச்சம்பவத்திற்குப் பின் நிச்சயம் தன்னை மணந்துகொள்வான்; பின் பிரச்னை ஒன்றுமிராது என முழு நம்பிக்கையோடிருந்தாள். இதுவே இஸ்ரவேலில் சட்டமாயிருந்தபடியால் அவ்விதமே ஆகும் என எதிர்பார்த்தாள். ஆகவேதான் அம்னோன் தன்னை வெளியே போகச் சொல்லியவுடன் திடுக்கிட்டவளாய், “நீ எனக்கு முன்பு செய்த அநியாயத்தைவிட இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிற அந்த அநியாயம் கொடுமையாயிருக்கிறது” என்றாள்.

அம்னோனின் இச்சகமான நடத்தை யாவும் நேசமல்ல; தற்காலிகமாக அவன் தன் இழிவான இச்சையைத் திருப்தி செய்த கீழ்த்தரமான மோகமென்பது அப்பொழுதுதான் தாமாரின் உள்ளத்தில்



உதித்தது. ஆனால் காரியம் கட்டுக்கடங்காமல் போயிற்று. என்னே பரிதாபம்! தன் மானத்தை மறைக்க அவள் அங்கிருந்து செல்ல மறுப்பதையன்றி வேறென்னத்தான் செய்ய முடியும்? ஆனால், பாவம், பலாத்காரமாக வெளியே தள்ளப்பட்டாள். கதவும் மூடப்பட்டது. அழகிய கன்னியொருத்திக்கு இதைவிட பரிதபிக்கக் கூடிய நிலை நிகழக்கூடுமோ? வண்ண எண்ணங்களின் வாடிய இதழ்கள் உதிர்ந்தன. பச்சை இலைகளும் பட்டன. மறைந்திருந்த கொடூர முட்கள் கோரமாய்க் காட்சியளித்தன. ஆம், முள் தைத்துவிட்டது. எச்சரிக்க அல்ல — தாக்கவே. தாமார் தன் தலையில் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, அக்காலத்துக் கன்னியரின் மகிமையாகிய தன் பலவர்ண ஆடையைக் கிழித்துக்கொண்டு, தலையில் கை வைத்தவளாய் ஓலமிட்டுக்கொண்டே சென்றாள். பெண்ணாகப் பிறந்துவிட்ட அவள் வேறு என்னதான் செய்யக் கூடும்? இக்கதையின் சோகக்கட்டம், தாமார் தன் சகோதரன் வீட்டில் மவுனமாய் நொந்துகொண்டு தனித்திருந்ததே. இதுவே அவளுக்கு விதியாயிற்று.

அன்பு மகளே, தாமாரைப்போல் உலகமறியா பேதையாக நீ இருப்பதை நான் சற்றும் விரும்பவில்லை. ஆண்களின் பால் உணர்ச்சிகள் பெண்களின் உணர்ச்சிகளைவிட வீரியமானவை என்பதை மட்டும் தாமார் அறிந்திருந்தாளானால் இந்த ஆபத்தில் தன் காலை வைத்திருக்கவே மாட்டாள். பெண்ணின் உணர்ச்சிகள் பொதுவாக நிதானமும் கற்பனை உலகிலேயே திருப்தியடையக் கூடியவையுமானவை. ஆனால் ஆண்களோ ஒரு பெண்ணின் புன்னகை, ஒரு பார்வை முதலிய சிறு செய்கைகளினாலேயேகூட மிகவும் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். ஒரு பெண்ணைப் போலல்லாமல் ஆண்கள் நொடிப்பொழுதில் தங்கள் உணர்ச்சியின் உச்ச நிலையை அடையக்கூடியவர்களாக மட்டுமல்ல, அவற்றை எளிதில் அடக்கக் கூடாதவர்களாகவும் இருக்கிறார்கள். கூடுமானால் தங்கள் இச்சைகளைத் திருப்தி செய்யும்வரை அமரமாட்டார்கள். உடலுறவுக்குப்பின் உடனே திருப்தியுடன் அமர்ந்துவிடுவர். பெண்

களோ தாங்கள் நேசிக்கப்படவும், விரும்பப்படவும் ஆசிப்பார்களே யன்றி, நேசமும் பாசமுமற்ற பாலுறவுகளை விரும்புவது அரிது. இதனாலேயே கன்னியர் ஆடவரோடு நெருங்கிப் பழகக்கூடாது.

மட்டுமன்றி பெண்கள் எக்காரணத்தைக்கொண்டும் ஆண் களுடன் தனித்திருத்தலைத் தவிர்க்கவேண்டும். எனவேதான் ‘‘வாலிப இச்சைகளுக்கு விலகி ஓடு’’ என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் ஆலோசனை கூறுகிறார் (2 தீமோ 2:22). தன்னடக்கம் என் பதை ஒருபோதும் நம்பாதே. அது மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அவியாதிருப்பது போன்றது. வாலிபரின் தூண்டுதல்களை நேசமெனக் கருதிப் பெண்கள் ஏமாறுகின்றனர்; அது நேசமல்ல; மோகமே. அதை முளையிலேயே கிள்ளியெறியாவிடில் அது தொட் டுப்பழகும் நிலையை அடையும். இதற்கும் ஒரு பெண் இடங்கொடுப் பாளானால், அவன் தன்னை வெறுத்துவிடுவானோ அல்லது அவனை இழந்து விடுவோமா என்ற பயமே ஒரு பெண் தன் உடலைத் தடையின்றி அவன் அநுபவிக்க விட்டுக்கொடுக்க ஏதுவாகிறது. ஆனால் உண்மை அன்பு மற்றவருக்கு இழுக்கு உண்டுபண்ணி ஒருநாளும் தன் இச்சைகளை நிறைவேற்றாதே.

மோகத்தை ஒருபோதும் தூண்டிவிடுதல் கூடாது. உணர்ச்சி களைக் கிளரும் கள்ளப் பார்வையோ, உடை அலங்காரமோ வம்பை விலைக்கு வாங்குவதாகும். உனக்கே நீ குழி தோண்டிவிடாதே. இப்படிப்பட்ட பெண்களை ஆண்கள் தங்கள் இச்சைகளை திருப்திப் படுத்த மட்டுமே பயன்படுத்துவாரேயன்றி மற்றபடி ஒன்றும் மதிக்க மாட்டார்கள். மறுபாலரால் மதிக்கப்பட வேண்டுமாயின், சற்று எட்டி நின்றே அவர்களுடன் பழகு. நமக்குத்தான் சீக்கிரம் திரு மணமாகிவிடுமே என்று ஒருபோதும் எண்ணாதே. தாமாரின் கதியை நினைத்துக்கொள். அவள் திருமணத்தையே கணித்திருந்தாள். ஆனால் துர்ப்பாக்கியமாய் ஏமாந்துபோனாள். சோதனையில் காலை வைக்காதே. பின்பு தாமாரைப்போல் மவுனமாயிருந்து யாரிடம் உன் மானக்கேட்டைப் பகிர்ந்துகொள்வாய்? தனித்து நொந்து



கொண்டிருக்க வேண்டியதுதான். அப்பாவித்தனமும், அறியாமையும் காதலைப் பொறுத்தவரை மூடத்தனமே. வாலிபன் இழப்பது ஒன்று மில்லை. கன்னிகையோ தனது (1) கற்பையும் (2) சமாதானத்தை யும் (3) எதிர்காலத்தையும் இழக்கிறாள்.

இச்சம்பவத்தில் வேறு சில படிப்பினைகளும் உள்ளன. தேவ பயமற்ற நண்பர்களிடத்தில் உள்ளம் திறந்து பேசுதல் மதியீனம். இக்காரியங்களில் உன் பெற்றோரின் உதவியை நாடு. அது சிரம மாயின் உன் உடன் விசுவாசியிடமோ ஓர் தேவ ஊழியக்காரியி டமோ ஆலோசனைக்குச் செல். தேவ பயமற்ற நண்பர் யோன தாபைப்போல் உன் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு உன் விதியை வேடிக்கை பார்ப்பரேயன்றி உண்மையாக உதவ மாட்டார்கள். தன் சகோதரி அவமானப்பட்ட நாளிலிருந்தே அப்சலோமின் இதயத்தில் அம்னோனைக் கொலை செய்யும் எண்ணம் இருந்தது என்று அறிந்தும் தன் சிநேகிதனை அவன் எச்சரிக்க அக்கறை காட்ட வில்லை. அம்னோனின் மரணம் அவனுக்கு ஒரு துக்க செய்தியாக வரவில்லை என்பது எத்தனை ஆச்சரியம்! (13:32).

பெற்றோரே, வேதம் உங்களையும் எச்சரிக்கிறது. 2 சாமுவேல் 11,12ஆம் அத்தியாயங்களில் தாவீது பத்சேபாளோடு செய்த பாவத்தை வாசிக்கிறோம். அதற்கு தேவனுடைய ஒரு சாபம் ‘‘நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணுவேன்’’ என்பது (12:11). இது 13ஆம் அத்தியாயத்திலேயே நிறைவேறிவிடு கிறது. கர்த்தருடைய நாமம் தூற்றப்பட ஏதுவாயிருக்கும் இப்பா வத்தை தேவன் சகிக்கமாட்டார் (12:14). தாவீது அம்னோனின் வேண்டுதலைத் துவக்கத்திலேயே கண்டிக்காமல் சமைப்பதற்காய்த் தாமாரை அனுப்பிவைத்தார். தன்னுடைய ஒப்பந்தத்தின் பேரிலேயே தன் பிள்ளைகள் மிதமிஞ்சி சென்றுவிட்ட பின்னர் அவர்கள்மேல் காலம் கடந்தபின் எரிந்து விழுந்தார் (13:21). அதோடு நிற்காமல் தன் மகனை இஸ்ரவேலின் முறைப்படி தண்டித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால் தேவ கோபம் தன் மகனைப் பட்சிக்க வழிவகுத்தார்.

அநேக பெற்றோரின் தவறு முளையிலேயே கிள்ளி எறியாததே. இடைவிடா கண்காணிப்பும் புத்திமதிகளும் 12 வயதிலேயே துவங்க வேண்டும். சந்தேகமான நடத்தைகள், தவறான பழக்கவழக்கங்கள் அவ்வப்பொழுதே கண்டிக்கப்படவேண்டும். அவிழ்த்து விட்டுவிட்டு கடைசியில் அலறித் தவிப்பதில் அர்த்தமென்ன? இந்நாட்களில் பெற்றோர் தங்கள் வீடுகளிலேயே ஆபாசமான புத்தகங்களை வாங்கிப் போடுவதும், படக்காட்சிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதும், மேற்பார்வையின்றி TV பார்க்க விடுவதும் பிள்ளைகள் சிற்றின்பப் பாவங்களில் ஈடுபட தாங்கள் அறியாமலேயே தூண்டிவிடும் ஏதுக்கள் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். இவையே விபச்சாரம் மற்றும் வேசித்தனத்துக்கு வித்துக்களாகும். பெண் பிள்ளை இருந்தால்தான் கவலை, பையன்கள் மட்டும் இருந்தால் கவலையில்லை என்றும் யாரும் கரிசனையற்று இருக்கவேண்டாம். பெண்ணுக்கு உடனே பிரச்னையானால், பையனை அம்னோனைப்போல் காலம் கடந்தாலும், பாவம் நிச்சயமாய்த் தொடர்ந்து பிடிக்கும்.

நங்கையே, “உன் இளமையிலே சந்தோஷப்படு. உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும் உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றிற்காகவும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி!” (பிர 11:9).



# 10

# திருமணமும் திருமனமும்

உன் பெற்றோர் ஒருவேளை உனக்குத் திருமணம் செய்ய ஒழுங்கு பண்ணிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் ‘கிசு கிசு’வெனப் பேசுவது, நீ அறைக்குள் நுழைந்ததும் பேச்சை நிறுத்திவிடுவது, இவையெல்லாம் ஒரு வாலிபப் பெண்ணுக்குச் சங்கடமாக இருக்கும். புகைப்படங்கள் பரிமாறுவது, கேள்விகள் கேட்பது, பிரச்னைகளை விவாதிப்பது, அந்நியர்கள் வருவது, போவது போன்றவை யாவும் உன் மனத்திரையை ஆடவைக்கும். இந்நிலையில் அநேக கன்னியர்கள் அழுது அழுது பித்துப்பிடிப்பதுபோல் ஆகிவிடுவதுண்டு. இன்றைய சில நவநாகரிகப் பெண்களோ இந்தக் காரியத்தில் நேர்மாறாகக் காணப்படுவர். அவர்கள் தங்களது விநோத நடவடிக்கைகள், வெகு நேரம் பிந்தி வீட்டுக்கு வருதல், இரகசியக் கடிதங்கள் எழுதுதல், இன்னும் இதுபோன்ற செயல்களினால் தங்கள் பெற்றோரையே பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு இழுத்துவிடுவார்கள். நல்லது. எது எப்படியிருந்தாலும், வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் இம்முக்கிய காரியத்திற்குப் பைபிள் கூறும் ஆலோசனை என்னவெனக் கவனிப்போம்.

உன்னை குறித்துத் திருச்சித்தத்தைக் கண்டறிய முதலாவது நீ அவர் பாதத்தில் அமரவேண்டும். ‘தேவனுடைய சித்தத்தை நான் கண்டறிவது எப்படி ? நான் யாரை மணக்கவேண்டும் என்று வேதம் எனக்குச் சொல்லுமா ?’ என நீ கேட்கலாம். மூன்று காரியங்கள் ஒருங்கிணைந்து தேவ சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றன —

(1) திருவசனம்

(2) தூய ஆவியானவரின் குரல்

(3) சூழ்நிலைச் சான்று

இவைகளை விவரமாக இங்கு பார்ப்போம்.

***திருவசனமே*** திருச்சித்தம். வேதமே இறுதியானது. அவரது வசனம் ஒருபோதும் மாறாது. நாம் அதைக் கவனமாகப் பின்பற்றினால் பிந்தி வருந்தவேண்டிய நிலையே வராது. “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” என்றார் தாவீது (சங் 119:105). இங்கே கவனிக்க வேண்டிய திருவசனம் 2 கொரிந்தியர் 6:14-16, “அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக.” சம பாரத்துடன் ஒரே இலக்கை நோக்கி ‘இணைந்து’ செல்ல இரு கழுத்துகள் நுகத்தில் பூட்டப்படுகின்றன. ஒரு விசுவாசி இயேசுவின் நுகத்தின் கீழ் வராத ஒருவரைத் தன்னோடு இழுத்துக்கொண்டு செல்ல முடியாது. அந்நிய நுகத்தை ஆமோதிக்க சிலர் 1 கொரிந்தியர் 7:14ஐத் தவறாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் பவுல் அங்கு பேசுவது ஏற்கனவே மணமானவர்களுக்கேயொழிய மணமாகாதவர்களுக்கல்ல என்பது நினைவிருக்கட்டும். திருமணத்துக்குப் பேசப்படும் நபர் ஒரு விசுவாசியாயில்லையானால் (வெறுமனே ‘நல்ல’ பையனாய் இருந்தால் மட்டும் போதாது !) காரியத்தை உடனடியாக அங்கேயே நிறுத்திவிடவேண்டும். உனக்கான தேவனின் மேலானதை உன் அவசரத்தினால் இழந்துபோகாதே.



அடுத்து வருவது ***தூய ஆவியானவரின் நடத்துதல்.*** நம்மிலிருக்கிற ஆவியானவர் எல்லாவற்றிலும் நம்மை நடத்துகிறார். ஆனால் எப்பொழுதும் அவர் எழுதப்பட்ட திருவசனத்திற்கு ஒத்தபடியே நடத்துவார். அவர் ஒருபோதும் வசனத்துக்கு மாறாய்ச் செய்வதில்லை. உனக்கு பேசப்படும் நபர் விசுவாசியாக இருப்பாரென்றால், அவர்தான் உனக்கு தேவ சித்தமா என அறிய தேவனிடத்தில் காத்திரு. தேவன் நமக்கு “தெளிந்த புத்தியைத்” தந்திருக்கிறார். நாம் அவரது சித்தத்தில் காணப்படுவோமாகில், பூரண சமாதானத்தோடு இருப்போம். இந்தக் காரியத்தில் “தீர்க்கதரிசி” என்று எவரும் உனக்குச் சொல்லுவதை நம்பி நீ தீர்மானிக்க வேண்டியதில்லை. தேவன் உனக்காகக் கவலைப்படுகிறார். உன்னை வழிநடத்த தமது கண்ணை உன்மீது வைத்திருக்கிறேன் என்று அவர் வாக்களித்துள்ளார்.

***சூழ்நிலைச் சான்று*** தேவ சித்தத்தை அறிவதில் மூன்றாவதாக வருகிறது. தெளிவான வேத உபதேசத்துக்கு பரிசுத்த ஆவியானவரின் உள்ளான சத்தத்தைக் கேட்டுக் கீழ்ப்படியும்போது, சூழ்நிலைகளை ஆளுகிற தேவன் கதவுகளைத் திறப்பார். அதே வேளையில் பிரச்னைகளைத் தீர்க்க சாதகமான சூழ்நிலைகளை மட்டுமே நம்பிப் போகாதே. சூழ்நிலைகளை மட்டுமே மனதிற்கொண்டு முடிவெடுத்த அநேகர் தவறி தேவனுக்காக தங்கள் ஆன்மீக வாழ்வில் கொண்டிருந்த அனலை இழந்துவிட்டனர். சில வேளைகளில் வேத வசனத்துக்கு நீ கீழ்ப்படிந்த பின்பும் சூழ்நிலைகள் உனக்குச் சாதகமாய்க் காணப்படாவிட்டால் பொறுமையோடு காத்திரு. வல்லமையுள்ளவர் உனக்கு வழியுண்டாக்க வெண்கலக் கதவுகளைக்கூட உடைத்திடுவார். “உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு ; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்” (சங் 37:5).

## 11

# “ஆண்டவரே, ஜெபிக்கக் கற்றுத்தாரும்!”

❒ ***அன்னாள்*** மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி... ஒரு பொருத்தனை பண்ணினாள். அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணுகிற போது, தன் இருதயத்தில் பேசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தன, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை; அன்னாள் ... நான் மனக்கிலேசமுள்ள பெண், நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன், மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரம் மட்டும் விண்ணப்பம்பண்ணினேன் என்றாள். பின்பு அவள் புறப்பட்டுப் போய்ச் சாப்பிட்டாள். அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை. இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள். அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி: உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன். கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ?



தள்ளாடினவர்களோ பலத்தினால் இடை கட்டப்பட்டவர்கள்; மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள். அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்; பலத்தினால் ஒருவனும் மேற்கொள்வதில்லை. தாம் அபிஷேகம் பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார் என்று துதித்தாள். (1 சாமு 1:10,12,13, 15,16,18,27,28; 2:1,3,5,9,10). கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் (மத் 7:7).

❒ ***மிரியாம்*** என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; எல்லா பெண்களும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப்போனார்கள். மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக: ‘‘கர்த்தரைப் பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்’’ என்று பாடினாள் (யாத் 15:20,21). என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துப்போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன் (சங் 30:11,12).

❒ நீ ராஜாவின் அரண்மனையிலிருக்கிறதினால் மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்? அப்பொழுது ***எஸ்தர்*** மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது: நீர் போய், யூதரையெல்லாம் கூடிவரச்செய்து உபவாசம் பண்ணுங்கள்: நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள் (எஸ்தர் 4:13-16). அப்பொழுது எஸ்தர், ராஜாவே ... என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் மக்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் மக்களும் விற்கப்பட்டோம் என்றாள் (எஸ்தர்

7:3,4). பின்னும் எஸ்தர் ராஜ சமுகத்தில் பேசி அவர் பாதங்களில் விழுந்து அழுது ... விண்ணப்பம் பண்ணினாள் (எஸ்தர் 8:3).

❒ சுகஜீவிகளாகிய பெண்களே, எழுந்திருந்து என் வார்த்தைகளைக் கேளுங்கள்; நிர்விசாரமான ***குமாரத்திகளே***, என் வசனத்துக்குச் செவிகொடுங்கள்; சுகஜீவிகளே, நடுங்குங்கள்; நிர்விசாரிகளே, தத்தளியுங்கள்; மக்கள் நிறைந்த நகரம் வெறுமையாகும். உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும் (ஏசா 32:9,11,14,15). என் நாமம் தரிக்கப்பட்ட என் மக்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு நன்மை அளிப்பேன் (2 நாளா 7:14). எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை (ஏசா 49:23). கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (ஏசா 55:6). விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார் (ஏசா 59:16). உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை (ஏசா 64:7). ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானல் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன். நீங்கள் யோசனை பண்ணி, புலம்பற்காரிகளை வரவழைத்து, அதிலே பழகின பெண்களைக் கூப்பிடுங்கள். அவர்கள் சீக்கிரமாய் நம்முடைய கண்கள் கண்ணீராய்ச் சொரியத்தக்கதாகவும், நம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்தக்கதாகவும் ஒப்பாரி சொல்லக்கடவர்கள். ஆதலால் பெண்களே, கர்த்தருடைய் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்கள் செவி அவருடைய வாயின் வசனத்தை ஏற்றுக்கொள்ளட்டும்; நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியும், அவளவள் தன் தன் தோழிக்குப் புலம்பலையும், கற்றுக்கொடுங்கள். வீதியிலிருக்கிற குழந்தைகளையும், தெருக்களில் இருக்கிற இளைஞரையும் சங்



காரம்பண்ண சாவு பிரவேசித்தது (எரே 9:1,17,18,20,21). வழியில் நடந்துபோகிற மக்களே, இதைக் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? (புல 1:12). என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலினிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப் போகின்றன; என் குடல்கள் கொதிக்கின்றன; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது. இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு. ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்க விடாதே, எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு; மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் உயிருக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு (புல 2:11,18,19).

❒ ***மரியாள்:*** இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும். அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள் (லூக் 2:37).

❒ மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் ***குமாரத்திகளும்*** தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். ***ஊழியக்காரிகள்*** மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். பயிர் முதிர்ந்தது (யோவே 2:28,29; 3:13). அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் (மத் 9:37,38). பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் ... மழையைக் கட்டளையிடுவார் (சக 10:1). கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன் (சக 12:10).

## 12

# வீட்டு ஜெபக்குழுக்கள்

அப்போஸ்தலர் 12ஆம் அத்தியாயத்தில் ஜெபத்தைப் பற்றி மகிமையான ஒரு வசனம் உண்டு.

**“சபையார் ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்” (வச 5).**

வேதம் முழுவதிலும் ஜெப ஊழியத்தில் பெண்கள் பெரும் பங்குவகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாம் பார்க்கும் இப் பகுதி அதற்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டு. பேதுரு சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காகத் தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். அவர்களுடைய கூப்பிடுதலைக் கேட்ட தேவன் ஒரு தூதனை விண்ணிலிருந்து அனுப்பி சிறையிலிருந்து பேதுருவை அற்புதமாக விடுவித்தார். அது நள்ளிரவு நேரம். “பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது ஏரோதின் கைக்கும், யூத மக்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றார். அவர் இப்படி நிச்சயித்துக் கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட



யோவானுடைய தாயாகிய *மரியாள்* வீட்டுக்கு வந்தார்; அங்கே அநேகர் *கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்*” (2:11,12). அது ஒரு ***பெண்கள் ஜெபக்கூட்டம்***. இவ்விதம் கூறுவதற்குக் காரணங்கள் —

(அ) எந்த வீடும் அவ்வீட்டுத் தலைவரின் (ஆடவர்) பெயராலேயே அழைக்கப்படும். இங்கேயோ, “யோவானுடைய தாயாகிய மரியாள் வீடு” என்று வாசிக்கிறோம். பொதுவாக பெண்கள் கூட்டம் ஒன்றைச் சபையில் அறிவிக்கும்போது மட்டுமே அவ்வீட்டிலுள்ள சகோதரியின் பெயரைச் சொல்லி அதாவது திருமதி இன்னாருடைய வீட்டில் என்று அறிவிப்பது வழக்கம்.

(ஆ) பேதுரு கதவைத் தட்டின நேரம் இரவு வேளையும், அதிகாரிகளால் மிகுந்த உபத்திரமும் உண்டான காலமுமாயிருந்தது. அது ஒரு பொதுவான கூட்டமாயிருந்தால் ஒரு சகோதரன் வந்து கதவைத் திறந்திருப்பார். ஆனால், “ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண்” என்று வாசிப்பதிலிருந்து அது பெண்கள் கூட்டம் என அறிகிறோம்.

(இ) “இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் *சகோதரருக்கும்* அறிவியுங்கள்” என்று ஜெபித்துக்கொண்டிருந்தவர்களிடத்தில் பேதுரு கூறியதிலிருந்து சகோதரர்கள் அங்கு இருக்கவில்லையென்றும், பிரத்யேகமாக அது பெண்களுக்குரிய ஒரு ஜெபக் கூட்டமே என்றும் புலனாகிறது.

வீட்டு ஜெபக்குழு ஒன்றை நல்ல முறையில் அமைத்து இயங்க வைக்க ஆட்கள் எண்ணிக்கை ஒரு பொருட்டல்ல. தேவனுடைய குறைந்த பட்ச அளவு இரண்டு. “உங்களில் *இரண்டு பேர்* தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே *ஒருமனப்பட்டிருந்தால்,* பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் *இரண்டு பேராவது மூன்று பேராவது*

என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்றார்" (மத் 18:19,20). எனவே ஜெபத்தில் உங்களோடு ஒருமனப்படக்கூடிய ஒன்று அல்லது இரண்டு சகோதரிகளைச் சேர்க்க முடிந்தால் உடனடியாக உங்கள் வீட்டில் ஒரு ஜெபக் குழுவை அமையுங்கள். இதோ சில நடைமுறை ஆலோசனைகள் —

1. வாரந்தோறும் கூடுவதற்கு ஏற்ற ஒரு நாளையும் நேரத்தையும் தெரிந்தெடுங்கள். குறிப்பிட்ட நேரத்தில் ஜெபத்தைத் துவக்குங்கள். 'போதுமான' எண்ணிக்கை வரும்வரை காத்திருக்கவேண்டாம்.

2. துதிப் பாடல் ஒன்றைப் பாடிக் கூட்டத்தைத் துவங்கி, ஒரு சிறு வேதப் பகுதியை வாசித்து சற்று நேரம் தியானியுங்கள். விவாதங்களை அகற்றுங்கள். முக்கியமாக நீங்கள் ஜெபிக்கும்படி கூடியிருப்பதால் பாட்டுகள் அதிகம் பாடவேண்டாம்.

3. இந்தியாவிலும், அகிலவுலகிலும் ஆவியானவரின் எழுப்புதல் உருவாகவும், புதிய ஏற்பாட்டு சுவிசேஷ ஊழியம் நடைபெறவும் ஜெபிப்பதே உங்கள் பொருளாயிருக்கட்டும். நம் நாட்டின் சந்திக்கப்படாத கிராம மக்களுக்காகவும், ஆதிவாசிகளுக்காகவும் மன்றாடுங்கள்.

4. ஆகாயத்தில் சிலம்பம் பண்ணாமல் குறிப்பாக ஜெபியுங்கள். ஒரு சகோதரி ஜெபிக்கும்போது மற்றவர்கள் கவனமாக ஜெபத்தைப் பின்தொடரவேண்டும். நீண்ட நேரம் ஒருவரே ஜெபிக்காதபடி சுருக்கம் சுருக்கமாக ஒவ்வொருவரும் ஜெபிக்கவேண்டும். இவ்விதமாக ஒரு நபரே ஒன்றுக்கு மேற்பட்ட தடவையும் ஜெபிக்க முடியும். ஆவியானவரின் நடத்துதலுக்கு விட்டுக்கொடுத்து ஜெபியுங்கள்.

5. துதியோடு ஜெபத்தைத் துவக்குங்கள். விடுதலையான ஆவியுடன் விசுவாசம் செயல்படுவதற்கேற்ற சூழ்நிலையை அது உருவாக்கும். முடிவில் கூடிவந்தோரின் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் ஜெபிக்கக் கொஞ்சம் நேரம் செலவிடுங்கள்.



6. பிற்பகல் நேரமே குடும்பப் பெண்கள் கூடி ஜெபிக்க ஏற்ற நேரம். மாலையில் கூடினால் ஜெபத்தை நீட்டவேண்டாம்; ஏனென்றால் பெண்கள் அதிக நேரம் அடுத்த வீட்டில் தங்குவது நல்லதல்ல. பரலோக சிந்தை நாம் இன்னும் பூவுலகில்தான் இருக்கிறோம் என்பதை மறந்துபோகும்படிச் செய்துவிடக்கூடாது!

7. வீட்டு ஜெபக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாது. அது வளர்ந்து எண்ணிக்கை 10 ஆகும்போது, முடிந்தால் வசதிக்கேற்ப அதை இரு குழுவாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.

மேலும் இவ்வித வீட்டு ஜெபக்குழுக்கள் வாரத்திற்கொருமுறையேனும் நாம் ஒருவரையொருவர் சந்தித்து, அவ்வாரத்தின் ஆத்தும ஆதாயப் பணியின் செய்திகளையும், பல்வேறு விதங்களில் ஆவியானவர் நம்மை நடத்தின அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ள ஏதுவுண்டாக்குகின்றன. நீங்கள் சேகரித்த தியாகக் காணிக்கைகளை ஒன்று சேர்த்து ஊழியங்களுக்கு அனுப்ப அதையும் அங்கு கொண்டு வரலாம். வாரந்தோறும் சேமிப்பது ஆதிக் கிறிஸ்தவர்களின் முறை (1 கொரி 16:2).

உலகை அசைக்கும் கரத்தை ஜெபம் அசைக்கும்!

# 13

# மருத்துவமனை ஊழியம்

“நான் வியாதியாயிருந்தேன், நீங்கள் என்னைப் பார்க்க வர வில்லை” என்று சொல்லும்போது, அன்று பிரதான ஆசாரியனுக்கும் தேசாதிபதிக்கும் முன்பாக அடிக்கப்பட்டு காயமுற்றவராய் தான் நின்றுகொண்டிருந்த இருள் சூழ்ந்த மப்பான நாளை நோக்கி இயேசுவின் எண்ண அலைகள் விரைந்து செல்லும். கெத்செமனே தோட்டத்திலேயே எல்லா பலத்தையும் இழந்த அவர் நலிந்தவராக இராமுழுவதும் தூக்கமில்லாமல் வியாதியுள்ளவர் போல் பரிதாபமாக நின்றுகொண்டிருந்தார். அன்றிரவு நன்கு தூங்கியெழுந்த அவரது சீடர்களும் துன்புறுத்தலுக்குப் பயந்து ஆற்றித்தேற்ற அவரைப் போய்ப் பார்க்கவில்லை. பெருமிதமாக துணிச்சல் பேசிய சீடன் தனது சாட்சியைப் பரிதாபமாக இழந்துவிட்டார் (மத் 26:69-74). மருத்துவமனைகளில் இறுதி வேளைகளில் தங்களை ஆற்றித் தேற்றும் முகமொன்றையும் காணாது ஏங்கித் தவிக்கும் எண்ணி றந்த நோயாளிகளை எண்ணி இயேசுவின் குடல் கொதித்திருக்கும்; ஏனென்றால் தானும் அவ்விதம்தானே பாடுபட்டார். “மிகவும் சிறிய



வராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” என்று அவ ரால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை (மத் 25:40). இறுதி வேளைகளில் ஆற்றித் தேற்றுவாரின் தேவையை அவர் நன்கறி வார். அன்று அவர்கள் அதுவரை பரிசுத்த ஆவியினால் நிரப்பப் படாதிருந்ததால் அவரை விட்டு “ஓடி” “மறுதலித்த” சீடர்களை நாம் ஒருவேளை குற்றஞ்சாட்ட முடியாது. ஆனால் இன்று நமக்குள் வல்லமையான ஆவியானவர் வந்துவிட்டாரே (அப் 1:8). “நன்மை செய்யும்படி உனக்கு வசதியிருக்கும்போது, அதைத் தேவைப் படுபவர்களுக்குச் செய்யாமல் இராதே” (நீதி 3:27).

மருத்துவமனை சந்திப்பு ஊழியம் மிகவும் கனி நிறைந்த ஒன்று. ஏனென்றால், யாராவது தங்களை ஆற்றித்தேற்றி உதவி செய்து நம்பிக்கை தரும் சில வார்த்தைகளைச் சொல்லமாட்டார்களா என்று அங்குள்ள நோயாளிகள் ஏங்கி நிற்கின்றனர். படுகுழியில் விழ நடுங்கிக்கொண்டு கிடைத்த துரும்பின் நுனியை இறுகப் பிடிக்கும் மனிதனைப் போன்ற அநேகர் அங்குண்டு. நம்பிக்கை போயிற்று; பயம் சூழ்ந்தது; நம்பிக்கை தருமென நினைத்து மெல்லிய கயிற்றையும் பிடிக்க ஆயத்தம். இம்மையின் வெளிவாயில், மறுமை யின் நுழைவாயில் ஆகிய இரண்டையும் கண்டு கலங்கி நிற்போர் எண்ணற்றோர். தீர்மானப் பள்ளத்தாக்கில் திரளானோர்! மகிமை யான நித்தியத்துக்குள் அவர்களை இழுத்துவிடுங்கள் (யோவேல் 3:13,14). எளிதில் நிறைய மீன்கள்!

மட்டுமல்ல, இது நமக்குப் பயனளிக்கும் ஊழியமும்கூட. ஏனென்றால், இங்கு சுவிசேஷத்தை மிக எளிய நடையில் அறிவிக்க நாம் பயிற்சி பெறுகிறோம். பொதுவாக மருத்துவமனைகள் ஊருக் குள் அமைந்திருக்கு மாதலால், பெண்கள் தயக்கமின்றி பத்திரமாக இவ்வூழியத்தில் ஈடுபடலாம். இவ்வூழியத்தில் நீங்கள் கையாள வேண்டிய சில விதிமுறைகளை இங்கு தருகிறேன்.

## 1. சாதகமாகப் பேசுங்கள்.

அவருக்கு இருக்கும் நோய் உயிர்ச் சேதமளிக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் நோயாளி எவரையும் மனந்தளரச் செய்யாதிருங்கள். சாவைப் பற்றிப் பேசி அவருக்குத் திகில் உண் டாக்க வேண்டாம். அவரை உற்சாகப்படுத்துங்கள். இயேசுவின் குணமாக்கும் வல்லமையை அறிவியுங்கள். வேதத்திலிருந்து சுகத் துக்கான வாக்குத்தத்தங்களை வாசித்துக் காட்டுங்கள். மருத்துவ மனைக்குள் இறப்பு என்ற பதம் பிணியாளிகளின் மனநிலையைப் பெரிதும் பாதித்துவிடும். ஆனால் மெள்ள மெள்ள ஒளிமயமான விண்வாழ்வைக் குறித்து அவரிடம் பேசிக் கர்த்தரைச் சந்திக்க அவரை ஆயத்தப்படுத்தலாம்.

## 2. உறுதியுடனிருங்கள்.

''புறப்பட்டுப் போங்கள்'' என்று இயேசு சொன்னபோது, ''நோயா ளிகள்மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது அவர்கள் சுக மடைவார்கள்'' என்ற வாக்கையும் கொடுத்தார் (மாற் 16:18). பிணியாளிகளுக்காக ஜெபிக்க ஒருபோதும் தயங்காதிருங்கள். கடவுளுடைய சுகமளிக்கும் வல்லமையைக் கூறி ஜெபியுங்கள். தமது வல்லமையை வெளிக்காட்ட தேவனுக்கு ஒரு தருணம் கொடுங்கள். விளைவுகளைப் பார்த்துச் சோர்ந்துபோகாதிருங்கள், அற்புதத்தை அவர் கரங்களில் விட்டுவிட்டு அவரது வாக்குத்தத் தங்களை நம்பினவர்களாய் முன்னேறிச் செல்லுங்கள்.

## 3. பொறுமையாயிருங்கள்.

பிணியாளிகள் பொதுவாக ஒத்துழைக்க மாட்டார்கள். மனந் தளர்ந்துபோன அவர்கள் தங்கள் நோயைப்பற்றி விவரித்துக் கொண்டேயிருப்பார்கள். நீங்கள் உங்கள் பொறுமையை இழந்து அவசர அவசரமாக சுவிசேஷத்தைக் கொட்டிவிட்டு அடுத்த படுக் கைக்குப் பறந்துவிடக்கூடாது. பொறுமையில்லாமல் பிணியாளிகளி டம் ஊழியம் இல்லை. பிணியாளியின் உடல் மற்றும் ஆன்மா ஆகிய இரண்டைக் குறித்தும் உங்களுக்கு அக்கறையுண்டு என்று



அவருக்குத் தெரியட்டும். வெறும் பிரச்சாரத்துக்கு அல்ல, அவர் மேலுள்ள அக்கரையோடுதான் நீங்கள் சென்றுள்ளீர்கள் என்று அவர் அறிந்துகொள்ளவேண்டும். தனது பிரச்னைகளை அவர் பகிர்ந்துகொள்ள விரும்பினால் கேட்கத் தயங்காதீர்கள். தேவை யானால் உதவியற்ற சிலருக்கு உங்களால் முடிந்த அளவு பண உதவியும் செய்யவேண்டும். அவருக்காக ஒரு கோப்பை தண்ணீர் எடுத்துக் கொடுக்கத் தயங்காதீர்கள். அவரிடம் துர்நாற்றம் வீசி னால் முகத்தைச் சுளிக்காதீர்கள். இவையெல்லாம் அவரைப் பெரிதும் பாதிக்கும்.

## 4. சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள்.

மருத்துவமனையின் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் கவனக் குறைவாயிருக்க வேண்டாம். நோயாளிகளைப் பார்க்கும் நேரங் களில் மட்டுமே உள்ளே செல்லுங்கள். தொத்துநோய்ப் பிரிவிலும், அபாய நிலையிலுமுள்ளவர்களைப் பார்க்க மருத்துவமனை அதி காரிகளிடம் தனி அனுமதி பெற்றுக்கொள்ளுங்கள். மருத்துவப் பணியாளருக்குச் சிரமம் கொடாதிருங்கள். பார்வை நேரங்களில் நோயாளிகளைச் சந்திப்பதற்கு தடையொன்றுமிராது. தடையேது மிருக்குமானால் சாந்தமாயிருங்கள். நற்பண்புகளைப் பறிகொடுத்து விடாதிருங்கள்.

## 5. பிரசுரங்களை எடுத்துச் செல்லுங்கள்.

எப்பொழுதும் நல்ல நற்செய்தித் துண்டுப் பிரசுரங்கள் உங்க ளிடம் இருக்கட்டும். ஆசீர்வாத இளைஞர் இயக்கம் வெளியிட் டுள்ள *உங்களுக்கு ஆசீர்வாதம், சுகமளிப்பவர் இயேசு* போன்ற பிரதிகளைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு பிரதியிலும் நம்பகமான தொடர்பு முகவரி ஒன்று கட்டாயம் இருக்கவேண்டும். தனிமையாகப் போவது அவ்வளவு நல்லதல்ல. இயேசுவின் ''இரண் டிரண்டு பேர்'' முறை தலைசிறந்தது. குழுவினர் எல்லாரும் ஒரே அறைக்குள் குவிந்துவிடக்கூடாது. ஜெபக் குறிப்புகளையும் முகவரி களையும் கைப்புத்தகமொன்றில் குறித்துக்கொள்ளுங்கள்.

சுகமடைவதற்காகப் பிணியாளிகள் பழைய ஏற்பாட்டு நாக மானைப்போல எதையும் செய்ய ஆயத்தமாயிருப்பர். சுகமடைந்த தால் அவர் மனந்திரும்ப வில்லையா? (2 இரா 5:9-19). சுவிசே ஷத்தில் ஆர்வங்காட்டினால் அங்குதானே அப்பொழுதே தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க நோயாளிகளை ஏவுங்கள். ஒப்புக் கொடுக்க மாதிரி ஜெபம் ஒன்றைச் சொல்லிக் கொடுக்கலாம். ஜெபத்துக்காக இக்காரியங்களை உங்கள் உடன் விசுவாசிகளுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். ஆர்வமுள்ள நோயாளிகளுக்கு உள்ளூர்ச் சபை மேய்ப்பர்களை அறிமுகப்படுத்தி வைப்பது நல்லது.

சுவிசேஷத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் செல்லவேண் டும் என்று சொன்னவுடன் பெண்கள் பல நொண்டிச் சாக்குபோக்கு களைச் சொல்லுவார்கள். உங்கள் வீட்டுப் பொறுப்புகளை உதறித் தள்ளக்கூடாது. உண்மைதான். ஆனால் மனமிருந்தால் மார்க்க முண்டே. அருமைப் பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் கடவுளால் பயன்படுத்தப்பட்டு வீட்டுக்கு ஆசீர்வாதம் கொண்டுவரத் தடை செய்யாதிருங்கள். கணவன்மாரே, தயவுசெய்து ஒத்துழையுங்கள்!

பிணியாளிகளைக் குறித்து தனக்கிருக்கும் பாரத்தை தாவீது இவ்விதம் அறிக்கையிடுகிறார்: “அவர்கள் வியாதியாயிருந்தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது; நான் உபவாசத்தால் என் ஆத்து மாவை உபத்திரவப்படுத்தினேன்” (சங் 35:13).

இறுதி நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசும்போது இயேசு சொன்னது: “அப்பொழுது இராஜா தமது வலது பக்கத்தில் நிற்ப வர்களைப் பார்த்து, வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருகிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் ... வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள் ... என்பார்” (மத் 25:34-36).



# 14

# நாதனுக்காய் நாடோடிகள்!

*(ஒரு மிஷனரி ஊழிய அனுபவம்)*

வேனிற்கால ஊழியம் ஓர் உல்லாசப் பயணமல்ல என்பதைத் துவக்கத்திலேயே கண்டுகொண்டோம். பெங்களூர் வந்ததும் செலவைக் குறைக்க சமைக்கச் சொன்னார்கள் தலைவர்கள். என் செய்வோம்? பிரயாணக் களைப்பு பின்னிடச் செய்தது; குழுத் தத்துவமோ மனச்சாட்சியை வதைத்தது. எப்படியோ சமாளித்து 3 மணிக்கு மதிய உணவைப் பரிமாறினோம். அதின் ருசிதான் என்னே!

ஹூப்ளி மிஷனரிகளின் வீடுகள் எங்கள் கற்பனைகளைத் தோற்கடித்துவிட்டன. குறவர் குடியிருப்பு; சூழப் பன்றிகள்; விநோத வாசனை. இரவெல்லாம் பன்றிகள் உறுமின. ஆனால் அன்றோ தூக்கமின்றித் திணறுபவரும் குரட்டைவிட்டுத் தூங்கினர். ஹூப்ளி கிளைச் சகோதரிகள் 12 பேரும் எங்களோடு சேர்ந்துகொண்டனர். அவர்களது கன்னட, தெலுங்கு, மராத்திச் சொற்கள் தமிழ், ஆங்கிலம், இந்தியோடு கலந்து காதுக்குள் கட்டெறும்பாய் நுழைந்து தலையைச் சுற்ற வைத்தன. பல்வேறு பின்னணிகளுடைய நாங்கள் எல்லாரும் எல்லாரோடும் இணைந்துபோக நல்ல பயிற்சிக்கூட

மாயிற்று. எங்கள் கரடுமுரடான சுபாவங்கள் கரையத் துவங்கின. சங்கீதக்காரன் மட்டும் உயிரோடிருந்திருந்தால், "இதோ, *சகோதரிகள்* ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" என்று தன் பாடலை மாற்றியமைத்திருப்பார்!

காடுகளூடே எங்கள் பாதைகள் கல்லும் முள்ளுமாயிருந்தன. நாங்கள் "பலமற்ற பாத்திரங்கள்" என்று சற்றும் சிந்திக்காதவராய் வழிகாட்டி முன்னே துரிதமாய் நடைபோட்டார்! புழுதியடைந்த அந்த வெப்ப வனாந்தரப் பாதையில் ஒரு நாளில் 17 மைல் வரையிலும் நடந்தோம். காலணிகள் தேய்ந்துபோயின. சுவிசேஷகியரின் அழகான பாதங்கள் வெப்பத்தால் வெடித்துப்போயின. கால்கள் அடியெடுக்க மறுத்தன. பாதி வழியில் குடிநீரும், உடல் வலுவும், நீடிய பொறுமையும், மற்றெல்லாமும் பூஜ்யத்தை எட்டிவிடும். அரை மணி நேர ஓய்வு ஆவியில் உற்சாகத்தைத்தான் கூட்டுமேயொழிய வேறொன்றையும் கூட்டாது! ஏற்ற வேளையில் ஏற்ற உணவு ஏற்ற அளவில் கிட்டாது. சிலவேளை சாப்பிட்டபின் பசியோடு செல்வோம். ஏனெனில், எதிர்பாராமல் புதிய தெபொராள்கள் குழுவில் இணைந்துவிடுவர். ஆயினும் அவர்களோடு உணவைப் பகிர்ந்துகொள்வது எங்களுக்குப் பசியைவிடப் பரவசத்தையே மூட்டியது. ஆனால் பற்றாக்குறைக்கு முக்கியக் காரணம், அழகைக் காக்க வீட்டில் அளந்து உண்ணும் பாவையரெல்லாம் பட்சிக்கும் ஓநாய்களாகி விட்டதுதான்! பசியில்லா வியாதிக்கு மிஷனரி ஊழியம் நல்ல மருந்துதான்!

தங்குமிடம் திரும்பும்போது கதிரவன் ஏனோ ஒளித்துக்கொள்ளுவான் — பார்க்க சகிக்கவில்லைபோலும்! மேனியெல்லாம் மண்ணாகி பெண்மணியர் திரும்பும்போது தண்ணீரும் காணாமல் தவித்து நிற்போம். குளிப்பில்லா நாலாம் நாளில் தாங்க முடியாமல், "சுத்தமான" குளத்தைக் கிராமத்தார் சுட்டிக்காட்டி வழியனுப்பினர். ஆசையாய்ச் சென்றோம். அதிர்ச்சியுற்றோம். காப்பி, இல்லை அழகாய் வர்ணிக்கவேண்டுமானால் சாக்லேட் நிற அல்லிக் குளமொன்



றில் சிறு கூட்டம் எருமைகள் அழகாய் நீராடி நின்றன. சிரிப்பதா, அழுவதா? நாங்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டோம். சொல்லப்போனால் நன்றாகத்தான் இருந்தது!

தங்குமிடமோ கேள்விப்பட்டிராத, தரை மெழுகப்படாத ஒரு தகரக் கொட்டகை. பகலில் வெயில் கொளுத்தும் தாவரகட்டி எனும் கிராமத்தில் இரவில் பனி கொட்டும் என்று யார் கண்டது? கையிலிருந்த மெல்லிய போர்வையின் ஒரு பகுதியில் படுத்து மறு பகுதியில் மூடிச் சுருண்டுகொள்வோம். இரவெல்லாம் தகர மேற் கூரையில் சொட்டு சொட்டெனப் பனி கொட்டும். ஆரூயிர் தாவரகட்டியை விட்டுப் பிரியும் வரை இரவு வேளை 'சோதனைக் காலமாகவே' கழிந்தது.

ஹூப்ளியைச் சுற்றியுள்ள கிராமங்களில் பயணம் செய்வதற்கு இமயமலை ஏறுவதே வாசி. பேருந்தோ தேடினாலும் தென்படாது. நடந்தோ, இரக்கமுள்ளதோர் ஓட்டுனரின் லாரிக்குள் மந்திகள்போல தாவிக் குதித்தோதான் எலும்புகள் கட்டுவிட்ட நிலையில் இடம் சேர்வோம். அதுவும் நன்மையாகவே ஆயிற்று. அதனால்தான் தூங்கும் 6 மணி நேரத்தில் படும் பாடுகளையும் வேதனைகளையும் இன்னதென்று அறியாமல் தன்னறிவிழந்திருந்தோம். இப்படிப்பட்ட மிஷனரி வாழ்க்கையை நாடுவதா, விட்டு ஓடுவதா?

### கடின உழைப்பு

பத்து நாட்களும் 14,400 மணித்துளிகளாய் ஓடின. வினாடியும் வீணடிக்க முடியவில்லை. குறவர் குடிலுக்குள் இருவரிருவராய் நுழைந்துவிடுவோம். சமையல்ஜோடு பாடுதான் திண்டாட்டம். காலை உணவு பரிமாறி மதிய உணவும் கட்டிப் புறப்பட்டுவிட வேண்டும். எனினும் யாவரும் முறைப்படி பங்கேற்றோம். இரயில் பாதைகளிலும் ஒற்றையடிப் பாதைகளிலும் "முடிவேயில்லையோ" என்று தோன்றும் வரை நடந்து சொற்ப குடிசைகளுள்ள கிராமத்தை அடைவோம். அந்த மக்களோடு பேசிப் பாடி ஜெபித்துப் பின்னும்

சுமார் 5 கல் தூரம் நடந்து அடுத்த கிராமம் சேர்வோம். தூசிநிறை எருசலேம் வீதிகளில் சுற்றித்திரிந்த இயேசு கிறிஸ்துவின் நினைவு, எதையும் எங்களுக்கு இலகுவாக்கிற்று. வாராவாரம் கால் நடையாய் இப்பாதையைக் கடந்து அடர்ந்த காடுகளூடே பொதிந்து கிடந்த இச்சில குடில்களைச் சந்தித்து வருவதாக மிஷனரிகள் சொன்ன போது எங்களால் நம்பவே முடியவில்லை. தேவன் நமக்குக் கிருபை யாய் அளித்துள்ள பணித்தளமாகிய நமது சொந்த ஊரில்தானே இப்படி வினாடிகளை எண்ணி நாம் ஏன் பாடுபடவில்லை என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. இயேசு, "போங்கள் ... போங்கள் ... போங்கள் ..." என்றாரே! (மத் 28:19; மாற் 16:15; யோ 20:17).

### ஆதிவாசிகள்

*கவுளி* மற்றும் *லம்பாடி* ஆதிவாசியினரைச் சந்தித்தோம். கவுளி இனத்தவர் சாதுவான மக்கள். மனித பயத்தினால் மக்கள் கூட்டங் களை விட்டகன்று காடுகளூடே வசிக்கின்றனர். உள்ளறையில் தாங்களும் முன்னறையில் வளர்ப்பு மிருகங்களையும் வைத்துப் பாதுகாக்கின்றனர்! நீக்ரோ இனத்தவரின் சாயலைக் கொண்டுள்ள தால் சித்ஹி இனத்தவரை "நீக்ரோ ஆதிவாசிகள்" என்றும் அழைக் கின்றனர். லம்பாடிகள் வசியமாய்ச் சிரிக்கும் அமைப்பான தோற்ற முடைய எளிய மக்கள். சுவிசேஷத்தை வரவேற்கின்றனர். இங் குள்ள நமது மிஷனரிகள் சுவிசேஷத்தைச் சுமந்துசெல்ல கர்நாட கத்தில் பொதிந்து கிடக்கும் பழங்குடியினரின் வாழ்தலங்களைத் தேடி வருகின்றனர்.

### மொழிப் பிரச்னை

மொழிப் பிரச்னையினால் சரளமாகப் பேச முடியாமல் துவக்கத் தில் சோர்ந்துபோனாலும், அதற்கு ஒரு முடிவு கட்டினோம். ஒவ் வொருவரும் கன்னடம், தெலுங்கு, மராத்தி ஆகியவற்றைச் சரள மாய்ப் பேசும் ஒருவருடன் இணைந்து இருவரிருவராய்ப் பிரிந்து சென்றோம். இவ்விதம் நற்செய்தியை அறைகூவினோம். தாவர



கட்டியில் இரவில் திறந்தவெளிப் பிரசங்கமும் செய்தோம். வாய்ப் புள்ளபோதே பிற மொழிகளைக் கற்றுக்கொள்ளும் அவசியத்தை நன்குணர்ந்தோம்.

### மாற்றுக் கலாச்சாரம்

பழங்குடிகளின் பழக்கவழக்கங்களைப் புரிந்துகொள்வது அத்தியாவசியம். *கவுளி* குடிலொன்றில் அவர்களிடம் எதிர்பார்த்த உற்சாகமின்றி, ஆயினும் பாடிப் பிரசங்கித்துக்கொண்டிருந்தோம். சகோதரர் இம்மக்களுக்குப் பிடித்தமானதொன்றைக் குறித்துச் சொன்னது சட்டென்று நினைவில் வர, உடனே வார்த்தைக்கு வார்த்தை 'மாமா' 'மவுசி' (மாமா, மாமி) என அழைத்துப் பேசினோம். பட்டென்று அவர்கள் முகத்தில் படர்ந்திருந்த நிழலகன்று முகங்கள் மலர்ந்தன. உள்ளத்தை வெளிப்படுத்தத் துவங்கி தங்கள் பிரச்னை களைப் பகிர்ந்துகொண்டு சுமுகமாய்ப் பழகத் துவங்கினர். பின்பு, "இயேசு நல்லவர், நல்லவர், மாமாவுக்கு (மவுசிக்கு)" என்று நாங்கள் மராத்தியில் பாடினபோது அவர்கள் புன்சிரிப்பைப் பார்க்கவேண் டுமே! நம்மை இரட்சிக்க தேவன் ஏன் 'மனிதனானார்' என்ற தாற்பரியம் புதிய விதத்தில் எங்களுக்குப் புலப்பட்டது.

பாரத மண்ணிலிருந்து நமது சகோதர சகோதரிகளின் இரத் தத்தின் கூக்குரல் கடவுளை நோக்கிக் கூப்பிடுகிறதே! இதைக் குறித்து நமக்குக் கவலையில்லையா?

# 15

# பெண்களுக்குக் கேள்விகள்

1. *ஏவாளைப்* போல கர்த்தருடைய வார்த்தையைச் சந்தேகித்து, அவருடைய கட்டளை எதற்காவது கீழ்ப்படியாமல் இருக்கிறாயா? (ஆதி 3:6)
2. *லோத்தின் மனைவியைப்* போல உலகத்தால் கவரப்பட்டு, கர்த்தரை முழு இருதயத்தோடு பின்பற்றாமல் இருக்கிறாயா? (ஆதி 19:26; லூக் 17:32)
3. *போத்திபாரின் மனைவியைப்* போல உன் கண்கள் இச்சையினால் நிறைந்திருக்கின்றனவா? (ஆதி 39:7)
4. *சமாரியப் பெண்ணைப்* போல வாழ்க்கையின் தாகத்தைப் பாவ இன்பங்களால் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கிறாயா?(யோ 4:17,18)
5. *ராகேலைப்* போல, கர்த்தரைப் பின்பற்றத் துவங்கிய பின்பும் உனது "விக்கிரகத்தை" விட்டுவிட மனதில்லாதிருக்கிறாயா? (கர்த்தருக்குரிய இடத்தை எது எடுத்துக்கொள்ளுகிறதோ அதுவே விக்கிரகமாகும்.) (ஆதி 31:34)



6. *சப்பீராளைப்* போல உனது பொருளாசையினால் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறாயா? (அப் 5:9)
7. *மீகாளைப்* போல பிறருடைய ஆன்மீக உன்னத அனுபவங்களை அவமதிக்கிறாயா? (2 சாமு 6:16,23)
8. *சீயோன் குமாரத்திகளைப்* போல பெருமையுடையவளாய் இருக்கிறாயா? (ஏசா 3:16,17)
9. *மிரியாமைப்* போல புறங்கூறுகிறாயா? பக்திவிருத்தியற்ற வீண் பேச்சுக்கும், உலகப் பிரகாரமான அரட்டைக்கும் உன் நாவைப் பறிகொடுக்கிறாயா? (எண் 12:1,2,9,10; 1 தீமோ 5:13)
10. *வேசி* உலகத்தின், நிர்வாணத்திற்கு நேரான, வேத வசனத்திற்கு எதிரான, நாகரிகச் சரிவைப் பின்பற்றும்படி உன் உடையில் நாணயத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டுகிறாயா? (1 தீமோ 2:9,10; உபா 22:5)
11. *மார்த்தாளைப்* போல வீட்டலுவல்களில் அதிகமாகச் சிக்கிக் கொண்டு கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருக்கும் வேளையை அசட்டை செய்கிறாயா? (லூக் 10:39-42)
12. *மரியாளைப்* போல தேவ வசனத்தின் ஆதிக்கத்துக்கு முழுவதுமாக அடிபணிந்திருக்கிறாயா? அல்லது 2 தீமோத்தேயு 3:6, 7இலுள்ள பெண்களைப் போல இருக்கிறாயா? (லூக் 1:38)
13. *அன்னாளைப்* போல உனது பாரங்கள் யாவற்றையும் ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச் செல்லக் கற்றிருக்கிறாயா? அல்லது மனிதரிடமே அவைகளைச் சொல்லிக்கொண்டு அவர்களுடைய பரிதாபத்தையே நாடி அலைகிறாயா? (1 சாமு 1:15,18)
14. *அன்னாளைப்* போல உன்னுடைய பொருத்தனைகளைக் கர்த்தருக்கு நிறைவேற்றிவிட்டாயா? (1 சாமு 1:11,27,28; பிர 5:4,5)

15. *தொற்காளைப்* போல நற்செயல்களில் விறுவிறுப்பாகவும், நீதிமொழிகள் 31இலுள்ள *மாதிரிப் பெண்ணைப்* போல சுறு சுறுப்பாகவும் இருக்கிறாயா? அல்லது சோம்பலும் நிர்விசார முமாய் இருக்கிறாயா?
(அப் 9:36,39; நீதி 31:15,27; ஏசா 32:9)

16. *தெபொராளைப்* போல உனது நாட்டை ஆன்மீக இருளிலிருந்து மீட்பதற்காக எழுந்திருக்கிறாயா? (நியா 5:7,12)

17. *எயோதியாள், சிந்திகேயாளைப்* போல உனது தருணம், தாலந்து, தனம் இவற்றின் வாயிலாக மிஷனரிப் பணியைத் தாங்குவதில் உன் உச்ச அளவை எட்டியிருக்கிறாயா?
(பிலி 4:2,3; லூக் 8:2,3; யாத் 35:25,26)

18. *சாரிபாத் விதவையைப்* போல உனது முதற்கனிகளையும், மரியாளைப் போல உனது உசிதக் கனிகளையும் கர்த்தருக்குக் கொடுக்கிறாயா? (1 இரா 17:13-15; யோ 12:3)

19. *சாராளைப்* போல, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து, மெய்யாகவே அவருக்கு உதவித் துணையாக நடந்துகொள்கிறாயா? (1 பேது 3:6; எபே 5:22; ஆதி 2:18). குடும்பத்தின் பிற உறுப்பினர்களோடு பட்சமாய் நடந்துகொள்கிறாயா? (எபே 4:2,3)

20. *லோவிசாள், ஐனிக்கேயாளைப்* போல, உன் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு திருவசனப் போதனை யில் வளர்க்கிறாயா? (2 தீமோ 1:5; 3:15)







# அனுதின அலங்காரம்

**Daily Decoration**

***by***

**Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி**

இளவயது, நடுவயது மற்றும் முதிர்வயது பெண்களுக்குத் தனிச் சிறப்புள்ள தினத் தியான நூல்!

மாணவியர், மனைவியர், தாய்மார், முதியவரது தேவைகளைச் சந்திக்கும் நூல்!

''யாரைக் கேட்பது?'' என்ற கவலை இனி இல்லை.

இந்தப் புத்தகம் உங்களது பல கேள்விகளுக்குத் திருமறையின் அடிப்படையில் பதில் தரும்.

140க்கும் அதிகமான பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2040 வசனக் குறிப்புகள் (References) உண்டு.

அனுதினமும் உங்களை அலங்கரித்து ஆண்டின் இறுதியில் உங்களைச் சுந்தரிகளாக்கும்!

*412 பக்கங்கள், கவர்ச்சிகர அட்டை*
*விலை ரூ. 200/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*10 அல்லது கூடுதல் பிரதிகளுக்கு 30% தள்ளுபடி.*

யாரை மணப்பது? படிப்பு, பரீட்சை, காதல், பிள்ளை வளர்ப்பு, இல்லறம், சமையல், கணவன், தாம்பத்தியம், சிக்கல்கள், உடல்நலம், தனிமை, உடை, பாதுகாவல், வேலை இன்னும் இவை போன்றவற்றிற்கு நல்லாலோசனை!

எவருக்கும் ஏற்ற நேர்த்தியான அன்பளிப்பு!

ஆங்கிலம், இந்தி, கன்னடம், பஞ்சாபி ஆகிய மொழிகளிலும் உண்டு!

## ஆசிரியரது பிற நூல்கள் —

1. *அவள் தீர்மானங்கள்*
2. *அனுதின அலங்காரம்*
3. *ஆஹா, கிருபை!*
4. *இயேசுவின் பின்னே ...*
5. *உலகில் உத்தமி*
6. *கண்ணீர் துடைப்போர் யார்?*
7. *கம்பளிப் பூச்சி*
8. *குட்டி இதயங்கள் குட்டிக் கதைகள் 100 (தொகுப்பு 1,2,3,4,5)*
9. *குடும்பமே குடும்பம்!*
10. *குதூகலக் கிறிஸ்தவம்*
11. *சாத்தானுக்கு டாடா*
12. *தம்பதியர் தடுமாற்றங்கள் (ஒலித்தட்டு)*
13. *தெபொராளே, விழித்தெழு!*
14. *தேவனே, நான் உமதண்டையில் ...*
15. *பகலில் வந்த கனா!*
16. *பசங்க ... பொண்ணுங்க ...*
17. *பனிபோல் வெண்மை*
18. *பயனுள்ள பாத்திரம்*
19. *பறக்கும் பாவையர்*
20. *12 பொன் மாதங்கள்*
21. *பெண்மணி, நீ பொன்மணி!*
22. *மண்ணிலே வெண்ணிலா*
23. *முன்னேறும் கிறிஸ்தவன்*
24. *வயது பதினாறிருக்கும்!*
25. *வாலிப உலகம்*
26. *ஞானத்தைத் தேடி*
27. *கொஞ்சம் பொறுத்திருங்களேன்! (கைப்பிரதி)*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



***கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற***
***இன்றே வாசியுங்கள் ...***

**ஆசீர்வாதம்** **Blessing**

*எழுப்புதலுக்கும் நற்செய்திப்பணிக்கும்*
*அர்ப்பணிக்கப்பட்ட மாதாந்திரப் பத்திரிகை!*

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

*அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,*
*தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்*
*ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.*

ஆண்டுச் சந்தா ரூ. 100/-

கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 1000/- செலுத்தி
இப்பத்திரிகைக்கு 15 ஆண்டுகளுக்குச் சந்தாதாரரானால்,
பணம் பெற்றுக்கொண்ட நாள் முதல் இப்பத்திரிகையையும்,
நாங்கள் வெளியிடும் புத்தகங்கள் அனைத்தையும்
15 ஆண்டுகளுக்கு இலவசமாய் அனுப்பிவைப்போம்.

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006, India
*Tel: 00 91 94452 74310, 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>*

*கிறிஸ்தவ வாழ்வில்*
*நிறைவாய் வளர உணவளிக்கும்*
*ஒரு தினசரித் தியான நூல் ...*



# நாளொரு மேனி

**Better Everyday**

by

**R. ஸ்டான்லி**

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும் ...**
**அனைத்து வயதினரும் ...**
**அனைத்துத் துறையினரும் ...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*432 பக்கங்கள்; விலை ரூ. 200/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி*

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

*கிடைக்குமிடம்:*

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>

*Available online as a free daily mail*
*if you register your e-mail id on the author's website.*
*To receive daily devotionals in audio format,*
*send your WhatsApp number to 99949 04808 or 98430 11943.*



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

**Blessing Youth Mission**

எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பரிவு பாகுபாடில்லாத, திருப்பணி

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாட வகுப்புகள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் போன்றவற்றைச் சந்தித்தல்.

❐

400க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒடிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம், பஞ்சாப் மற்றும் ஜார்கண்ட் ஆகிய
மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும்
ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *''ஆசீர்வாதம்''* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

Blessing Youth Mission
Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 94452 74310, 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org> www.bymonline.org*